வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 26.02.2024 திங்கட்கிழமை இதழ் : 57 பக்கங்கள் : 12

# தமிழினத்துக்கு துரோகம் செய்துகொண்டு! தமிழ்த் தேசிய கட்சிக்குள் இருக்காதீர்கள்!

## தென்கயிலை அகத்தியர் சுவாமிகள்

• **அரசியல்வாதிகளை கேள்விகளாலும் துளைத்தார்**



யாழ்ப்பாணம், பெப்ரவரி 26

**தமிழினத்துக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் துரோகம் செய்து கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் இருக்க வேண்டாம். அது எமது தமிழின இருப்பைச் சிதைக்கும் - இவ்வாறு தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.**

"தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்" எனும் தொனிப்பொருளில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடிகாமத்திலுள்ள தனியார் மண்டபத்தில் நடந்தது. இங்கு உரையாற்றிய அவர், "அரசியல் தீர்வை சர்வதேசத்திடம் 11

## ஜனாதிபதி ரணில் - பஸில் அடுத்த வாரம் சந்திப்பர்!

கொழும்பு, பெப். 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் பஸில் ராஜபக்ஷவும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை - மார்ச் 3இல் சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி ஆளும் கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அறிய வருகின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் அமெரிக்கா சென்ற பஸில் ராஜபக்ஷ, ஜனவரி மாதம் நாடு 11

## பெரும்பான்மைவாதம் குறித்து அவதானம் தேவை!

### இராஜாங்க அமைச்சர் தாரக

புதுடில்லி, பெப். 26

நாங்கள் அனைவரும் ஜனநாயகம் குறித்து நம்பிக்கை கொண்டுள்ள போதிலும் நாங்கள் பெரும்பான்மைவாதம் குறித்து அவதானமாகயிருக்க வேண்டும் - என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூர்ய எச்சரித்துள்ளார்.

இந்தியாவில் நடந்த கலந்துரையாடல் நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு, இலங்கை 1980களின் நடுப்பகுதியில் இன மோதலை எதிர்கொண்டது என்பது 11

## செங்கடல் கண்காணிப்பில் ஈடுபட்ட கப்பல் திரும்புகிறது!

கொழும்பு, பெப். 26

செங்கடலின் பாதுகாப்புக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக மிகவும் இரகசியமாக அனுப்பப்பட்ட இலங்கை கடற்படை கப்பல் தனது கூட்டு நடவடிக்கையை பூர்த்திசெய்து நாடு திரும்புகின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது.

பப் எல் மன்டெப் நீரிணைக்கு இலங்கை கடற்படை கப்பல் அனுப்பப்பட்டதை கடற்படை பேச்சாளர் கயன் விக்கிரமசூர்ய உறுதி செய்தார். எந்த பிரச்சினைகளையும் எதிர்கொள்ளாமல் இலங்கை கடற்படை கப்பல் தனது கண்காணிப்பு நடவடிக்கையை பூர்த்தி 11

## சிறந்த 10 பாடசாலைகளில் மூன்று வடக்கை சேர்ந்தவை!

### யாழ். இந்து, வேம்படி இடம்பிடிப்பு

கொழும்பு, பெப். 26

நாட்டின் சிறந்த 10 பாடசாலைகளில் வடக்கு மாகாணத்தின் மூன்று பாடசாலைகள் இடம்பிடித்துள்ளன. இவ்வாறு இடம்பிடித்த பாடசாலைகளில் இரு பாடசாலைகள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவை.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவையே இவ்வாறு சிறந்த பாடசாலைகளாக 11

## காணிப் பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதி தலைமையில் கூட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நிலவும் காணிப் பிரச்னைகளை தீர்க்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் இந்த விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் இரு மாவட்டங்களிலும் காணப் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நடமாடும் சேவைகள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஒரு இலட்சம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டம்!

கொழும்பு, பெப். 26

நாடு முழுவதும் வசதி குறைந்த - திறமையான ஒரு இலட்சம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப் படுத்த வுள்ளார். இதற்காக அவர், 360 கோடி ரூபாயை தனது நிதியத்தின் மூலம் ஒதுக்கியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி நிதியம் 'ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில் 2024/2025' திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்த திட்டமிட்டுள்ளது.

இதன்படி, நாட்டிலுள்ள 10 ஆயிரத்து 126 11

ஜனாதிபதி தேர்தல்:

## கட்சி சார்பற்ற வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டி!

கொழும்பு, பெப். 26

ஒக்ரோபரில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கட்சி சார்பற்ற வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்று முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஒவ்வொரு வரும் தமது செலவு களை மட்டுப்படுத்தி நிதிக் கட் டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் 11



ஐ. நா. மனித உரிமை கூட்டத் தொடர்:

## உத்தியோகபூர்வ குழு எதுவும் இலங்கையிலிருந்து செல்லாது

கொழும்பு, பெப். 26

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை சார்பில் உத்தியோகபூர்வ குழு எதுவும் ஜெனிவா செல்லாது. கூட்டத் தொடர் விடயங்கள் அனைத்தையும் ஐ. நா. வதிவிடப் பிரதிநிதியே கையாள்வார் என்று அரசாங்கம் கூறியுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் 55ஆவது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. இந்தக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இதில், பங்கேற்பதற்காக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

சில வருடங்களுக்கு முன்னர் டான் குழுமத் தலைவர் குகநாதன் தனது தொலைக்காட்சியின் வரலாறு பற்றி ஒரு நிகழ்வில் உரையாற்றியபோது தெரிவித்த ஒரு விடயம் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

பாரிஸில் அவர் ஆரம்பித்த ரி. ஆர். ரி. தொலைக்காட்சி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் டான் ரீ. வியை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருந்த அந்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை முதல் தடவையாக பிரிட்டன் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் பட்டியலிட்டு அறிவித்த அன்றைய தினம் இலங்கையில் அது பெரு மகிழ்ச்சி நாளாகக் கொண்டாடப்பட்டது. தெற்கில் பல இடங்களில் சிங்கள மக்கள் பட்டாசுகளை கொழுத்தி மகிழ்ச்சி ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தனர். அந்தத் தடைக்கு காரணமானவர் என்று அப்போதைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை முழு சிங்கள சமூகமும் கொண்டாடிக்கொண்டிருந்தது.

அந்த நாளை டான் ரீ. வி கறுப்பு நாளாக அறிவித்து விட்டு, எந்த நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பாமல் திரையை கறுப்பு கலரில் இன்று தமிழர்களுக்கு துக்க நாள் என்று அறிவித்துவிட்டு நிகழ்ச்சிகள் அனைத்தையும் இரத்துச் செய்திருந்தது.

ஆனால், அப்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ரி. ஆர். ரி. (அப்போது அது ரி. ரி. என். என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தது) அன்றைய தினத்தை ஜோதிகா ஸ்பெஷல் நாளாக அறிவித்து அன்று முழுநாளும் ஜோதிகா நடித்த படம், பாடல்கள் என்று ஒளிபரப்பிக்கொண்டிருந்தது.

அதுபற்றி அவர்களிடம் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நேயர் கேட்டபோது அவர்கள் சொன்னது, இந்தத் தடையால் எமக்கு எந்தப் பாதிப்பும் வரப் போவதில்லை என்று.

அவர்களைப் பொறுத்தவரை அது பாதிப்பு தரப்போவதில்லை என்றாலும் அதுவே, அவர்கள் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்படுவதற்கு பிள்ளையார் சுழி போட்டது என்பதை பின்னாளில் அறிந்திருப்பார்களோ தெரியவில்லை. ஆனால், அதனால் வரப் போகின்ற பின் விளைவுகள் பற்றி டான் ரீ. வி முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்ததுடன், சிங்களவர்கள் அதனை மகிழ்ச்சி நாளாக கொண்டாடுகின்றார்கள் என்றால் அது எமக்கு துக்க நாள்தான் என்று விளக்கமளித்தது.

அந்தச் செய்தியை படித்த போது குகநாதன் அன்று தனது உரையில் சொன்ன இந்த தகவல்தான் ஞாபகத்துக்கு வந்தது.

இலங்கை அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்துச் செய்யும் பிரேரணையை பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார். அது தொடர்பான செய்தியைப் பார்த்தபோதே மேலே அவர் சொன்ன அந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

அந்தச் செய்தியை எமது மக்களோ, ஏன் அரசியல் தலைவர்களோ எவ்வளவு தூரம் முக்கியமான பிரச்னை என்று எடுத்துக்கொண்டார்களோ தெரியவில்லை.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது திடீரென்று பதின்மூன்று பற்றி பலமாக பேசினார்.

பதின்மூன்று என்பது அரசமைப்பில் இருக்கின்ற ஒன்று. அதனை ஒரு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியான நான் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அதனை யாராவது விரும்பவில்லை என்றால், பாராளுமன்றத்தில் பிரேரணையைக் கொண்டு வந்து அதனை நீக்கவேண்டும். இல்லையேல், நான் அதனை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்று கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அதன் பின்னர், பதின்மூன்றாவது திருத்தம் பற்றி தமிழ் கட்சிகளுடனான சந்திப்பு ஒன்றில் பொலிஸ் அதிகாரத்தை விடுத்து மற்றைய அதிகாரங்களை முழுமையாக அமுல்படுத்த தான் தயாராக இருக்கிறேன் என்று ஜனாதிபதி அறிவித்ததும் ஞாபகமிருக்கலாம்.

இப்போது தனிநபர் பிரேரணையாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரத்தை இரத்து செய்யும் பிரேரணை ஒன்றை கம்மன்பில தாக்கல் செய்திருக்கிறார்.

அது ஒரு தனிநபர் பிரேரணை என்பதால் அது எவ்வளவு தூரம் விரைவாக பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் என்பது கேள்விக்கு உரியதாக இருந்தாலும் பாராளுமன்றத்தில் எந்த நேரத்திலும் அப்போதைய அரசாங்கம் விரும்பினால், அது விவாதிக்கப்பட்டு சபையின் தீர்மானத்துக்கு விடுக்கப்படலாம் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அரசமைப்புக்கு கொண்டுவரப்பட்ட இந்த பதின்மூன்றாவது திருத்தம் என்பது, இலங்கை - இந்திய உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதனை முழுமையாக நீக்குவதற்கு இலங்கையில் முயற்சி நடைபெற்றால் அதனை தட்டிக்கேட்கும் உரிமை இந்தியாவுக்கு இருக்கும். ஆனால், அதிலிருந்து இதுபோன்ற அதிகாரக் குறைப்புகள் செய்யப்படும்போது அதற்கு எதிராக இந்தியா கடும் ஆட்சேபனையை தெரிவிக்கும் என்று கூட இன்று நம்புவதற்கில்லை. இந்நிலையில், இந்த விடயத்தை பத்தோடு பதினொன்றாகக் கடந்து செல்வது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

குருந்தூர்மலையில் மாவட்ட நீதிமன்றம் விகாரை கட்ட தடை விதித்தபோதிலும் அங்கே விகாரை கட்டப்பட்டபோது அதனை தடுத்திருக்கவேண்டியது, அதாவது நீதிமன்ற கட்டளையை காப்பாற்றியிருக்கவேண்டியது பொலிஸாரின் கடமை. ஆனால், பொலிஸார் அதனை கண்டு கொள்ளவில்லை. மாகாண அரசிடம் பொலிஸ் அதிகாரம் இருந்தால் மாத்திரமே இதுபோன்ற அத்துமீறல்களை தடுக்கலாம்.

கம்மன்பிலவின் அந்த முயற்சியை முளையிலேயே கிள்ளுவதற்கு முயற்சிக்கவேண்டும்.

**- ஊர்க்குருவி.**

# 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலக்கை இந்த ஆண்டு அடைவோம்!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, பெப். 26

வரலாற்றில் முதன்முறையாக இந்த ஆண்டு 25 இலட்சம் சுற்றுலா பயணிகளை வரவழைக்கும் இலக்கை அடைய முடியும் என வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.



அதன்படி, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கருத்தில் கொண்டால், உரிய இலக்கை எளிதாக எட்ட முடியும் என்பது தெளிவாகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி கிராண்ட் கண்டியன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் கூறுகையில்,

கடந்த வருடம் 15 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். அந்த வருடம் ஜனவரியில் மட்டும் ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

இவ்வருடம் ஜனவரியில் 2 இலட்சத்து பத்தாயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்த கிரீஸ், சிம்பாப்வே, ஆர்ஜென்ரீனா போன்ற நாடுகள் அந்த நிலையிலிருந்து மீள்வதற்கு ஒரு தசாப்தத்துக்கும் மேலாக எடுத்துக்கொண்ட போதிலும், இலங்கை இரண்டு வருடங்களில் உரிய இலக்குகளை நெருங்கியது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆகவே, இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவமும் திட்டங்களுக்கு ஆதரவாக அமைந்துள்ளது.

உலகப் பொருளாதாரம் 8 இலட்சத்து 60 ஆயிரம் கோடி டொலராக இருக்கும் வேளையில் இலங்கையின் பொருளாதாரம் 7ஆயிரத்து 400 கோடி என்ற மிகச் சிறிய பெறுமதியில் இருக்கிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் பெரும் சந்தையை கட்டியெழுப்புவது அவசியமானது.

மேலும், சீனா, இந்தியா, பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகள் வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்வதற்கான முயற்சியின் பலனாக இன்று வேகமாக முன்னேறி வருகிறது.

நாட்டின் சரிவுகள் காரணமாக 13 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயு சிலிண்டருக்காக மூன்று முதல் நான்கு நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருட குறுகிய காலத்தில் 24 மணித்தியால தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்கி, அனைத்து வரிசைகளையும் களைந்து பணவீக்கத்தை கட்டுப்படுத்தினார். ஆகவே, தொடர்ந்து இன்னும் சில வருடங்கள் அவரை ஆட்சி செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

நாடு கட்டம் கட்டமாக முன்னேறிக்கொண்டு வரும் இந்நிலையில், இந்த ஆட்சிக்குப் பதிலாக வேறொரு ஆட்சியை ஏற்படுத்த எவரேனும் முனைந்தால் தற்போதைய நிலையிலிருந்து நாட்டை இன்னும் முன்னேற்றகரமான நிலைமைக்கு முன்னோக்கி கொண்டு செல்வதற்கான பொருளாதாரத் திட்டங்களை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டின் அரச சேவையானது நாட்டுக்கு பெரும் சுமையாக காணப்படுகிறது. இதற்கு பல சீர்திருத்தங்கள் தேவை - என்றார்.

(ஐ)

# தாயின் மரணத்தால் துயரடைந்த மகன் மாரடைப்பால் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 26

தாயின் மரணத்தால் துயரத்தால் பாதிக்கப்பட்ட மகனும் மாரடைப்பால் உயிரிழந்தார்.

காலி - இந்துருவ, அகாடகொட, கல்தரமுல்லையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த 22ஆம் திகதி தாயார் உயிரிழந்தார். அவரின் மரணத்தால் 47 வயதான அவரின் மகன் பெருந்துயரடைந்தார். இந்த நிலையில், தாயார் உயிரிழந்து சில மணிநேரங்களிலேயே மகனும் மாரடைப்பால் உயிரிழந்தார்.

(ஐ)

# விபத்தில் பெண் மரணம்! நான்கு பேர் படுகாயம்!!

கொழும்பு, பெப். 26

தங்காலை - மாத்தறை பிரதான வீதியின் தலல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் கொட்டகொட பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார்.

முச்சக்கர வண்டியும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது முச்சக்கரவண்டியில் ஐந்து பேர் பயணித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த 33 வயதான முச்சக்கரவண்டி சாரதி, 15 வயது சிறுவன், 14 வயது சிறுமி மற்றும் 11 மாத குழந்தை ஆகியோர் சிகிச்சைக்காக மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த குழந்தையின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வறட்சியை தடுக்க மரம் நடுவோம்!

கொழும்பு, பெப். 26

வறட்சியை தடுக்க ஒருவர் வருடத்துக்கு ஒரு மரம் நாட்ட வேண்டும் என்று கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சியான கால நிலைக்கு பொதுமக்களால் மட்டுமே தீர்வுகளை வழங்க முடியும். ஒருவர் வருடத்துக்கு ஒருவர் ஒரு மரக்கன்றையாவது நட்டினால் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க முடியும் என்று அவர் கூறினார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
26.02.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், மாசி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜனாதிபதித் தேர்தலின் சர்வதேச முக்கியத்துவம்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் மெதுவாகத் தீவிரமடைகின்றன. அமைதியாக இருந்த பௌத்த பிக்குகளும் மற்றும் சிங்கள தேசியவாத குழுக்களும் மெதுவாக முகம் காட்டத் தொடங்குகின்றனர். பௌத்த பிக்குகள் அணியொன்று மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தது. ரணிலிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுமாறு கோரியிருக்கின்றது.

13ஆவது திருத்தச்சட்டதிலுள்ள காவல்துறை அதிகாரத்தை நீக்குமாறு கோரி 22ஆவது திருத்தச்சட்டத்தை தனிநபர் பிரேரணையாக உதய கம்மன்பில முன்வைத்திருக்கின்ற சூழலில்தான் ரணிலிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுமாறு கோரிக்கையும் முன்வைக்கப்படுகின்றது. 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக ரணில் கூறியிருந்தார். இதேவேளை, இந்தியாவுக்கும் இலங்கைக்குமான தரைவழித் தொடர்பை ஏற்படுத்தப் போவதாகவும் இன்னும் பல திட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் ரணில் கூறிவருகின்றார். இவ்வாறானதொரு சூழலில் - ரணிலிடமிருந்து நாட்டை காப்பாற்றுதல் என்பதன் பொருள் என்ன?

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஜனாதிபதி தேர்தல் சிக்கலானதாக மாறப்போவது உறுதியாகின்றது. நிச்சயம் இந்தத் தேர்தல் முடிவுகளுக்கும் இந்திய - இலங்கை உறவுகளின் எதிர்காலத்துக்கும் நெருங்கிய தொடர்பிருக்கும். அதாவது, நிலைமைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படுமாக இருந்தால் மாலைதீவில் ஏற்பட்டது போன்றதொரு நிலைமையும் ஏற்படலாம். இவற்றைக் கருத்தில் கொண்டுதான் ஜனாதிபதி தேர்தலைக் கையாளும் பொறுப்பை தமிழ்க் கட்சிகள் தீர்மானிக்க வேண்டும்.

2015இல் ஏற்பட்டது போன்று - சுருங்கச் சொன்னால் அதனை விடவும் சிக்கலானதொரு நிலைமையே தற்போது ஏற்பட்டிருக்கின்றது. 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் சர்வதேச முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது. ஆனால், எதிர்பார்த்த விடயங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் 2018 உள்ளூராட்சித் தேர்தலில் ராஜபக்ஷக்கள் மீண்டும் எழுச்சியுற்றனர். அதனைத் தொடர்ந்து, கோட்டாபயவின் எழுச்சி இடம்பெற்றது. தற்போது அனைத்துத் தரப்புகளும் ஒப்பீட்டடிப்படையில் பலவீனமாக இருக்கின்ற சூழலிலேயே நாடு ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்கவுள்ளது.

இந்தியாவின் - அயல்நாடுகளின் அரசியல் உயர் குழாம்கள் - மத்தியில் தன் செல்வாக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை தேடுவதை ஒரு பிரதான அரசியல் தந்திரோபாயமாகவே சீனா கையாண்டு வருகின்றது. இந்த நிலையில், இலங்கைத் தீவின் ஜனாதிபதி தேர்தலில் செல்வாக்குச் செலுத்துவதற்கு சீனா நிச்சயம் முயற்சிக்கும். இதனடிப்படையில் கட்சிகளைக் கையாள முற்படும்.

சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கையில் உள்நுழைவதற்கான அனுமதி ஒரு வருடத்துக்கு இடைநிறுத்தப்பட்டிருக்கும் விடயத்தை சீனா சாதாரணமான ஒன்றாக நோக்காது. இலங்கையின் முடிவுக்கு சவால் விடும் வகையில் இலங்கையின் அயல்நாடான அதேவேளை மூலோபாய முக்கியத்தும் வாய்ந்த இடத்திலிருக்கும் மாலைதீவில் அதன் ஆய்வுக் கப்பலை நிறுத்திருக்கின்றது. மாலைதீவின் சீன சார்பு அரசாங்கத்தின் ஊடாகவே இதனை சாத்தியப்படுத்தியிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தனக்கு சாதகமான ஆட்சி என்னும் விடயம் சீனாவைப் பொறுத்தவரையில் முக்கியமானது. இந்த அடிப்படையில் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலை கையாள்வது சீனாவைப் பொறுத்தவரையில் தவிர்க்கவே முடியாதது.

இந்த அடிப்படையில் நோக்கினால் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலானது உலகளாவிய சீன விரிவாக்க விடயத்துடன் நேரடியாகத் தொடர்புறுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டுதான் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாள வேண்டுமென்று சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் இந்த விடயங்களின் அடிப்படையில்தான் விடயங்களை கையாள முயற்சிக்க வேண்டும். வழமைபோல் தென்னிலங்கை வேட்பாளர்களை நோக்கி கையை காட்டிவிட்டு அமைதியடையும் விடயம் இனிப் பொருத்தமற்றது.

# பாடசாலைகளிடையேயான உதைபந்து தெல்லிப்பழை மகாஜன இறுதியில்



யாழ்ப்பாணம், பெப். 26

அகில இலங்கை பாடசாலைகள் இடையிலான 18 வயதுக்கு உட்பட்ட மகளிருக்கான உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பழை மகாஜன கல்லூரி முன்னேறியுள்ளது

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் இந்தச் சுற்றில் அநுராதபுரத்தில் நடந்த அரையிறுதி ஆட்டத்தில் குருநாகல் கவுசிக முவ மகா வித்தியாலயத்தை தெல்லிப்பழை மகாஜன கல்லூரி எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியில் மார்ச் 9ஆம் திகதி களுத்துறை சென்.ஜோன் கல்லூரி அணியை மகாஜன கல்லூரி எதிர்த்து ஆடவுள்ளது. (ஐ)

# கட்டைக்காடு றோ. த. க. க. பாடசாலையில் பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்!

வடமராட்சி, பெப். 26

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோ. க. த. க பாடசாலையில் வரலாற்றில் முதல் முறையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை பழைய மாணவர் சங்க தெரிவு நடைபெற்று பழைய மாணவர் சங்கமும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் யோகலிங்கம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பழைய மாணவர்கள் பலர் கலந்து கொண்டு நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்து பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்தனர்.

புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் றோ. க. த. க. பாடசாலையின் பழைய மாணவர்கள் பல்வேறு உதவித்திட்டங்களை செய்து வருகின்றபோதும் இன்னும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை

வடமராட்சி கிழக்கில் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான கட்டைக்காடு றோ. க. த. க பாடசாலையில் குறிப்பாக வகுப்பறை பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற மாணவர்களின் பல்வேறு அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யாது காணப்படுகின்றன.

பழைய மாணவர்களின் கோரிக்கைக்கு அமைய நேற்று பழைய மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு தமது பாடசாலைகளின் அடிப்படை தேவைகளை தாமே நிறைவேற்ற அயராது உழைக்கப் போவதாக றோ.க.த.க பாட சாலையின் பழைய மாணவர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-2)

# ஆறாம் தரத்துக்கு மேல் 7 பாடங்களாக குறையும்!

## கல்வி அமைச்சர் சுசில் தகவல்

கொழும்பு, பெப். 26

ஆறாம் தரத்துக்கு மேலான மாணவர்களுக்கு பாடசாலையில் கற்கக் கூடிய பாடங்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் 7 பாடங்களாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


மேலும், மாணவர்கள் வாழும் அந்தந்த மாகாணங்களுக்கு ஏற்ப பூர்வீக கைத்தொழில்களை இணைத்து எஞ்சிய 3 பாடங்களையும் கற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

மேலும், பாடசாலைகளுக்கு வரும் அனைத்து ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்ப அறிவை பெற்றிருக்க வேண்டும் என்றும், அனைத்து வலயத்திலும் அமைக்கப்பட்டுள்ள கணினி வள மையங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பாரிய வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்கும் அதேவேளை, மென்பொருள் உருவாக்கம் மற்றும் பழுது பார்ப்புப் பணிகளுக்காக பிராந்திய மட்டத்தில் குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**மிதுனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேளை முடியும். நன்மைகளும் ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகள் வரும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சிலவேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அலைக்கழிக்கப்படுவார்கள்.

**கன்னி**
மறைமுகவிமர்சனங்களும்தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**துலாம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய்முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுபவிஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் திடீர் திருப்பம் வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். சில புதுமைகளை செய்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# மீனவர் விடுதலையை வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் உண்ணாவிரதம்!

இராமநாதபுரம், பெப். 26

இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் இரண்டாம் நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்தது.

எல்லை தாண்டி மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களுக்கு 6 மாதம் முதல் ஒரு வருடம் வரை தண்டனை விதித்தது இலங்கை. அவர்களை விடுதலை செய்ய வேண்டும். படகுகளை விடுவிக்க வேண்டும் என்று இந்திய மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி ஒரு வாரத்துக்கும் மேலாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.



இந்நிலையில், இராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடத்தில் மீனவர்கள் நேற்றுமுன்தினம் முதல் காலவரையற்ற தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர். (ஐ)

# அரசியலிருந்து விலகத் தயார்!

## அண்ணாமலை

மதுரை, பெப். 26

தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியதாக தி. மு. க. நிரூபித்தால், நான் அரசியலை விட்டு விலகத் தயார் என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை கூறினார்.

என் மண் என் மக்கள் பாத யாத்திரை மதுரையை சென்றடைந்தது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திராவிட அரசியலை வேரோடு அழிக்கும் தேர்தல், வரும் மக்களவைத் தேர்தலாகும். மூன்றாவது முறையாக மோடி பிரதமராக வருவார் என்று குழந்தைக்குக்கூட தெரியும். 400 தொகுதிகளுக்கு மேல் பா. ஜ. க. வெற்றிபெறும்.

தமிழக அரசியலைச் சுத்தம் செய்து, சாமானியர்களுக்கான அரசியலைக் கொண்டுவர, குடும்ப, ஊழல், அராஜக ஆட்சியை அகற்றவேண்டும். அடுத்த 80 நாட்களுக்கு மோடி போல பா. ஜ. கவினர் சுறுசுறுப்பாக வேலை செய்தால், தமிழகத்தில் அவரது கனவு நிறைவேறும்.

இந்த 10 ஆண்டுகளில் தமிழ் மொழி, கலாசாரத்தை உலகம் முழுவதும் கொண்டு சென்றுள்ளார் பிரதமர் மோடி. அவர் இந்தியாவை ஒருங்கிணைத்து வருகிறார். ஆனால், தி. மு. கவினர் வடக்கு, தெற்கு என பிரிவினை பேசி வருகின்றனர். 90 சதவீத தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக முதல்வர் கூறி வருகிறார். அவர்கள் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியதை நிரூபித்தால், நான் அரசியலை விட்டு விலகத் தயார்.



பங்காளி (அ. தி. மு. க.) கட்சியினர் என்னை பூச்சாண்டி, மாயாண்டி என்பதால் எனக்கு வருத்தமில்லை. பழனிசாமியை போல, திருநீற்றை அழித்து விட்டு, எஸ். டி. பி. ஐ. நடத்திய மாநாட்டில் நான் பங்கேற்கவில்லை. 2024 மக்களவைத் தேர்தல் நமக்கான தேர்தல். மோடியை மீண்டும் பிரதமராக்க வேண்டும் - என்றார். (ஐ)

# ஒரு ரூபாய்கூட மத்தி தரவில்லை!

## முதல்வர் ஸ்டாலின்

தூத்துக்குடி, பெப். 26

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் தமிழக அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு ஒரு ரூபாய்கூட தரவில்லை என்று கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடந்தது. இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா பெருந்தொற்று வந்தபோது தி. மு. க. ஆட்சியில் இல்லை. ஆனால், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்துப் பொருட்களையும் வாங்கி கொடுத்தோம். பல ஊர்களில் உணவுக்கூடங்களை அமைத்து உணவு வழங்கினோம். தி. மு. க. ஆட்சிக்கு வந்தபோதும் கரோனா அலை இருந்தது. அப்போது குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 4000 ரூபாய் வழங்கினோம் -இது தான் திமுகவின் ஆட்சி - என்றும் அவர் கூறினார். (ஐ)

# அ. தி. மு. கவுடன் பா. ம. க. கூட்டணி!

சென்னை, பெப். 26

எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இணைவது உறுதியாகியுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ தகவல் விரைவில் வெளியாகும்.

அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணியில் தே. மு. தி. க. , பா. ம. க. கட்சிகளை சேர்ப்பதற்கு பேச்சு நடந்து வருகின்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸை அ. தி. மு. க. முன்னாள் அமைச்சரும் எம்.பி.யுமான சி.வி. சண்முகம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது, பா. ம. க. கட்சிக்கு தர்மபுரி, விழுப்புரம், அரக்கோணம், கடலூர், மத்திய சென்னை, திண்டுக்கல், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய 7 தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காங்கிரஸின் விஜயதாரணி பா. ஜ. கவில் இணைந்தார்!

## எம். எல். ஏ. பதவியையும் துறந்தார்

புதுடில்லி, பெப். 26

காங்கிரஸ் கட்சியின் தமிழக சட்டமன்ற உறுப்பினரான விஜயதாரணி பாரதிய ஜனதா கட்சியில் இணைந்துள்ளார். இதைத் தொடர்ந்து அவர் தனது பதவியையும் ராஜினாமா செய்துள்ளார்.

குமரி மாவட்டம் விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் தொடர்ந்து 3 முறை சட்டமன்ற உறுப்பினராக தெரிவானவர் விஜயதாரணி.

அண்மைக்காலமாக காங்கிரஸ் கட்சி தலைமை தொடர்பில் அவர் அதிருப்தியில் இருந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்று முன்தினம் பா. ஜ. க. கட்சியில் இணைந்தார். தொடர்ந்து, நேற்று தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜிநாமா செய்துள்ளார். (ஐ)

# தேராவிலில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்னைக்கு தீர்வு




முல்லைத்தீவு, பெப். 26

தேராவில் குளத்தின் மேலதிக நீரால் பாதிக்கப்பட்டு இரண்டு மாதங்களாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தீர்வு வழங்கும் முகமாக முல்லைத்தீவில் வெள்ள நீர் முகாமைத்துவ செயல்திட்டம் மாவட்ட அரசாங்க அதிபரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேராவில் குளத்தின் மேலதிக நீரினை வெளியேற்றுவதற்கான செயல்திட்டம் லைக்கா ஞானம் அறக்கட்டளை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப்பங்களிப்புடன் நேற்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது தேராவில் குளத்து மேலதிக நீரினை வெளியேற்றும் குறித்த திட்டத்திற்கான திட்டத்தின் பெயர் பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கனரக இயந்திரம் கொண்டு நீரை வெட்டி அகற்றும் திட்டம் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

தேராவில் குளத்து நீர் நிரம்பி மேலதிக நீரினால் குளத்திற்கு அருகில் இருந்த 17 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு சுமார் இரண்டு மாதங்களாக இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமா மகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்தன்,லைக்கா ஞானம் அறக்கட்டளையின் உபதலைவரும் முன்னாள் அரசாங்க அதிபர் சு. அருமைநாயகம், கமநல சேவை பணிமனை உதவிப்பணிப்பாளர் பரணிதரன் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

(ஐ)



# இலவச கண் சிகிச்சை முகாம்!

வடமராட்சி, பெப். 26

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய வின்சன்டி போல் சபையினர் ஒழுங்குபடுத்திய இலவச கண்பரிசோதனை முகாம் நேற்று முன்தினம் கட்டைக்காட்டில் நடைபெற்றது

கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளார் தலைமையில் மரியாள் மண்டபத்தில் ஆரம்பமான குறித்த நிகழ்வில் ஆர். ஐ. எஸ். கண்பரிசோதனை மையத்தின் மருத்துவர் ரகு இணைந்து கொண்டு இலவச கண் பரிசோதனையை மேற்கொண்டார். அத்துடன், அதிக விலைக்கழிவில் மூக்குக் கண்ணாடிகளையும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த இலவச கண் பரிசோதனை நிகழ்வில் வடமராட்சி கிழக்கின் உடுத்துறை, ஆழியவளை வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு,கேவில் பிரதேச மக்கள் பயன் பெற்றனர்.

(ஐ-02)

# பீடி வாங்குவது போல் நடித்து பெண்ணிடம் சங்கிலி அறுப்பு!

வவுனியா, பெப். 26

கடையில் நின்ற பெண்ணிடம் பொருட்கள் வாங்குவது போன்று பாசாங்கு செய்து அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை இருவர் அறுத்து சென்றுள்ளனர்.

வவுனியா - பூந்தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் மாலைவேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நகையை பறித்து சென்ற இருவரும் கடையிலிருந்த பெண்ணிடம் பீடி தருமாறு கேட்டனர் என்றும் அவர் அதை எடுப்பதற்காக திரும்பியபோது சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றுள்ளனர்.

வவுனியா பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரித்து வருகின்றனர்.

(ஐ)



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பணி இளைப்பாறியவருக்கு மணிவிழா!

யாழ்ப்பாணம், பெப். 26

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தராகப் பணியாற்றி இளைப்பாறுகை பெற்ற வதனி கேதாரநாதனின் மணிவிழா அண்மையில் நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், கலாசாலையின் முன்னாள் அதிபர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு இளைப்பாறுகை பெற்ற வதனி கேதாரநாதனைக் கௌரவித்தனர்.

(ஐ)

# மோ.சைக்கிள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணம் நகரில் கடைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று தீ மூட்டி எரிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் - கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடை முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ மூட்டியவர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை உருட்டிச் செல்வது அருகில் உள்ள சி. சி. ரீ. வி கமெராவில் சிக்கியுள்ளது.

முன் பகை காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புபட்டவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# கல்லாரை வளர்மதி நிலையத்தில் அறிவொளி விழிப்புணர்வு நிகழ்ச்சி!



யாழ்ப்பாணம், பெப். 26

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக் கிழமை மல்லாகம் - கல்லாரை கிராமத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் தொடர்பான அறிவைப் புகட்டுவதன் ஊடாகச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டமொன்றை கிராமங்கள் தோறும் முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே, கல்லாரை வளர்மதி சனசமூக நிலைய முன்றலில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர், மிதுசன் தலைமையில் நடைபெற்ற பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இவர்களுடன் வளர்மதி சனசமூக நிலையத்தின் உபதலைவர் ஐ. குணசீலன், ஆலோசகர் சி. நாகதீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கல்லாரைக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களும், பெற்றோர்களும் பங்கு கொண்டிருந்த இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவருக்கும் பசுமை அப்பியாசக் கொப்பிகள் அவர்களின் கற்றல் தேவைகளின் பொருட்டு வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை கனடா றொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# புதுமுக மாணவனின்மீது மாணவர்கள் தாக்குதல்!

வடமராட்சி, பெப். 26

நெல்லியடி பாடசாலை ஒன்றில் தரம்-6இல் புதிதாக இணைந்த மாணவன் மீது தரம் - 10 இல் கல்வி கற்கும் சில மாணவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் காது வழியாக குருதி வந்த நிலையில் மாணவன் பருத் தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பாதிக்கப் பட்ட மாணவனின் பெற்றோர் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்துள் ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

# ஆற்றில் மூழ்கி மாணவன் பலி!

கொழும்பு, பெப். 26

ஆற்றில் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா - தலவாக்கலை பிரதேசத்தில் இருந்து லிந்துலை நகருக்கு சென்று நாகசேனை ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த மூன்று பாடசாலை மாணவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில் பிரதேச மக்களின் உதவியுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியவில் இடம்பெற்றுள்ளது. இதில்,

தலவாக்கலையை சேர்ந்த 14 வயதுடைய என். ஜீ. டிலிப்ப கமகே என்ற மாணவனே உயிரிழந்தார்.

(ஐ)

# வடக்கு, கிழக்கு தலைவர்களையும் இணைத்து புதிய அரசியல் கூட்டணி!

**அநுர பிரிதர்ஷன யாப்பா**



**கொழும்பு, பெப். 26**

**தென்னிலங்கை அரசியல்வாதிகள் மாத்திரமின்றி வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் தலைவர்களையும் இணைத் துக்கொண்டு புதிய அரசியல் கூட்டணி முன்னோக்கி பயணிக்கும். இந்தப் புதிய கூட்டணியின் ஊடாக அரசியல் புரட்சியையும், பொருளாதார புரட்சியையும் ஏற்படுத்துவோம் என பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாபா தெரிவித்தார்.**

புதிய அரசியல் கூட்டணியின் கொழும்பு மாவட்டத்தின் முதல் பொதுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாம் யாருடன் இணையப் போகின்றோம் என்று கேட்கின்றனர். நாம் யாருடனும் தனித்து இணையப் போவதில்லை. சிறீ லங்கா சுதந்திர கட்சியானாலும் பொதுஜன பெரமுனவானாலும் சகலரும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இதன் காரணமாகவே பல திசைகளிலும் காணப்பட்ட நாம் அனைவரும் இன்று ஒன்றிணைந்து கூட்டணியை அமைத்துள்ளோம்.

75 ஆண்டுகள் வாக்குறுதி அரசியலால் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். அந்த கலாசாரத்தை நாம் மாற்றியமைக்க வேண்டும். சுதந்திரத்தின் பின்னர் பிரிவினைவாதங்களால் நாடு பல கலவரங்களை எதிர்கொண்டது. 30 வருட கொடூர யுத்தத்தையும் எதிர்கொண்டது. இனியொருபோதும் அவ்வாறான யுத்தங்களுக்கும் வன்முறைகளுக்கும் இடமளிக்கக் கூடாது.

பிரபாகரனின் யுத்தத்தை வெற்றி கொண்டாலும் எம்மால் பொருளாதார யுத்தத்தை வெற்றி கொள்ள முடியாமலுள்ளது. எனவே, அதற்கு நாம் தயாராக வேண்டும். அதற்காக சிறந்த வேலைத்திட்டத்துடன் எவ்வித இன, மத பேதமும் இன்றி இணைந்து பயணிக்க வேண்டும். தற்போதுள்ள இந்த நிலைமைகளின் அடிப்படையில் எம்மால் தேர்தல் வாக்குறுதிகளை வழங்க முடியாது. எனவே தான் மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

வியத்மக அமைப்பை கட்டியெழுப்பி புதிய ஜனாதிபதி வேட்பாளரை அறிமுகப்படுத்தி அவரை வெற்றி பெறச் செய்தோம். எனினும், அது தோல்வியிலேயே முடிவடைந்தது. எனவே இனி நாம் அவதானத்துடன் சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும். தென்னிலங்கை அரசியல்வாதிகள் மாத்திரமின்றி வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களையும் இணைத்துக் கொண்டு நாம் முன்னோக்கி பயணிப்போம். அதற்கு எடுத்துக்காட்டாகவே இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இன்று எம்முடன் இணைந்துள்ளார். புதிய கூட்டணியின் ஊடாக புதிய அரசியல் புரட்சியையும், பொருளாதார புரட்சியையும் ஏற்படுத்துவோம் - என்றார். (ஐ)

# மூன்று இலட்சம் இலங்கையர்கள் வருடாந்தம் வெளியேறுகின்றனர்!

கொழும்பு, பெப். 26

ஒரு வருடத்தில் சுமார் மூன்று இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். இவர்களில் 41 வீத மானவர்கள் தொழில் வல்லுநர்கள் அல்லது ஏதோ ஒரு துறையில் திறமைமிக்கவர்கள் என்று புலம்பெயர்ந்து செல்லும் இலங்கையர்கள் தொடர்பான அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பெரும் நெருக்கடியால் இலங்கையர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. 2023ஆம் ஆண்டில் மாதாந்தம் வெளிநாடு சென்றோரின் எண்ணிக்கை 25 ஆயிரத்தால் உயர்ந்திருந்தது.

இதன்படி, ஒரு வருடத்தில் சுமார் மூன்று இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் அல்லது வேலைக்காக வெளிநாடு செல்கின்றனர்- என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# சீனாவில் கைதான தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்!

கொழும்பு, பெப். 26

கொள்கலனுக்குள் மறைந்திருந்து மலேசியாவுக்கு செல்ல முயன்றபோது சீனாவில் கைது செய்யப்பட்ட இலங்கை தமிழர்கள் இருவர் ஒரு வருடத்தின் பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் ஏற்றப்பட்டிருந்த வெற்று கொள்கலன் ஒன்றில் மறைந்திருந்த இவர்கள் இருவரும் மலேசியாவுக்கு செல்ல முயன்றுள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி 30 ஆம் திகதி மலேசியா செல்வதற்காக கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த “மெர்க்ஸ் யுனிகார்ன்” என்ற கப்பலில் ஏற்றப்பட்ட வெற்று கொள்கலனுக்குள் குறித்த இருவரும் இரகசியமாக நுழைந்துள்ளனர்.

அந்தக் கப்பல் மலேசியாவை சென்றடைந்தபோது, அந்த கொள்கலனில் பதுங்கியிருந்த இரு சந்தேக நபர்களையும் ஏற்றுக்கொள்ள மலேசியா மறுத்தது. கப்பலில் திருப்பியனுப்பப்பட்ட இருவரும் சீனாவில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

26 வயதான மதி ராஜேந்திரன் மற்றும் 39 வயதான ஜெயக்குமார் தர்மராசா ஆகியோரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களாவர். (ஐ)

# தனிப்பட்ட தகவல் பாதுகாப்பில் அக்கறையுடன் செயல்படுங்கள்!

**இணைய பயன்பாட்டாளருக்கு அறிவுறுத்து**

கொழும்பு, பெப். 26

சில இணையத்தளங்கள், சமூக வலைதளங்கள் மூலம் பெறப்பட்ட தனிப்பட்ட தரவுகளை பயன்படுத்தி ஹேக்கர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இணையத்தைப் பயன்படுத்தும் போது பயனாளர்களின் முக்கியமான தனிப்பட்ட தகவல்கள் பாதுகாக்க இணையதளத்தில் பல்வேறு பாதுகாப்பு உத்திகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால், சில அரசு மற்றும் தனியார் இணையதளங்கள் மூன்றாம் தரப்பினருக்கு மிக எளிதாகத் தகவல்களைப் பெறும் திறனைக் கொண்டுள்ளன.

முகநூல், வட்ஸ்அப், மின்னஞ்சல் போன்ற முக்கியமான தரவுகளை உள்ளடக்கிய தனிப்பட்ட கணக்குகள் கணினி ஹெக்கர்களால் திருடப்படலாம் என கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், இணையத்தளத்தில் சிலரின் தனிப்பட்ட தரவுகளை உள்ளிடுவது அவசியம். எனவே, இதற்கு பொறுப்பானவர்கள் அந்த இணையத் தளங்களின் பாதுகாப்பை உறுதிசெய்து, அவர்களின் தனிப்பட்ட தகவல்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவதற்கு பாதுகாப்பான வழிமுறைகளைக் கையாள வேண்டும் என கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# திடீர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட சிறீ லங்கன் எயர்லைன்ஸ் ஊழியர்கள்

கொழும்பு, பெப். 26

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் அடிக்கடி தாமதம் மற்றும் இரத்துச் செய்யப்படுகின்றன. இதனால், கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வரும் பயணிகளின் தவறான வார்த்தைப் பிரயோகங்களை சகித்துக்கொள்ள முடியவில்லை என்று கூறி சிறீ லங்கன் எயார் லைன்ஸ் ஊழியர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உடனடி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் ‘அதிக எடையுடன் வண்டியை ஏற்றினால், மாடு வண்டியை இழுக்க முடியாமல் மாடு இறந்துவிடும்’ என்பது போன்ற நிலை உள்ளது - என்று சிறீ லங்கான எயார் லைன்ஸ் சிறிலங்கா சுதந்திர சேவைகள் சங்கத்தின் தலைவர் ஜனக விஜயபத்திரண தெரிவித்தார்.

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் பணியாளர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. தற்போது அனுபவமுள்ள முதிர்ச்சியடைந்த பெருமளவிலான பணியாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி வேறு வெளிநாட்டு விமான நிறுவனங்களில் இணைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, அனுபவமும் முதிர்ச்சியுமான ஊழியர்களை இலங்கைக்கு ஆட்சேர்ப்பு செய்து, சிறீ லங்கன் எயார் லைன்ஸுக்குச் சொந்தமான தற்போதைய விமானங்களுக்கு ஏற்றவாறு புதிய விமான அட்டவணையை தயார் செய்யுமாறு தமது தொழிற் சங்கம் அவசரமாக கோருவதாக ஜனக விஜயபத்திரத்ன தெரிவித்தார். விமானம் ரத்து மற்றும் தாமதம் ஏற்படுவதை தடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

சிறீ லங்கன் எயார்லைன்ஸின் இந்த நிலைமை சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நாட்டின் புகழுக்கு - நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் ஊழியர்கள் அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பித்த வேலைநிறுத்தப் போராட்டம் காலை 06.30 மணியளவில் முடிவடைந்தது. இதன் விளைவாக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

இந்த விடயங்கள் தொடர்பில் இன்று திங்கட்கிழமை கலந்துரையாடுவதற்கு இலங்கை அரச நிர்வாகம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கடனுக்காக அதிக வட்டி செலுத்தும் நாடு இலங்கை!

கொழும்பு, பெப். 26

உலக வங்கியின் அபிவிருத்திக் குறிகாட்டிகளுக்கு அமைய அரச வருமானத்தில் இருந்து கடனுக்காக அதிக வட்டியை செலுத்தும் நாடு இலங்கையே என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

கடந்த, 2000ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் அதன் வருமானத்திலிருந்து, கடனுக்காக 33 சதவீத வட்டியை செலுத்தியது. இதன்படி, அந்த ஆண்டில் கடனுக்காக வட்டி செலுத்தும் நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தில் இருந்தது.

2010ஆம் ஆண்டு, கடனுக்காக அதிக வட்டி செலுத்தும் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் காணப்பட்டது. அந்த ஆண்டில் செலுத்திய வட்டியானது அரச வருமானத்தில், 42 சதவீதமாகும்.

பின்னர் இலங்கை தமது அரச வருமானத்தில், 71 சதவீதத்தை 2020ஆம் ஆண்டிலும், 2023ஆம் ஆண்டு 77 சதவீதத்தையும் கடனுக்கான வட்டியாக செலுத்தியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 2020ஆம் ஆண்டில், அரச வருமனாத்திலிருந்து, கடனுக்கு அதிக வட்டி செலுத்தும் நாடுகளில் லெபனான் முதலாம் இடத்தில் காணப்பட்டது. அது அரச வருமானத்தில் 95 சதவீதமாக காணப்பட்டது.

2000ஆம் ஆண்டு முதல் தற்போது வரை கடனுக்காக அதிக வட்டியை செலுத்தும் நாடாக இலங்கை காணப்படுவதாக பேராதனை பல்கலைகழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். (ஐ)

# விருந்தில் ஆடிப் பாடிய இளைஞர் திடீர் மரணம்

கொழும்பு, பெப். 26

பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்த கேளிக்கை விருந்தில் ஆடிப் பாடியவர் திடீரென உயிரிழந்தார்.

தம்புள்ளை மாநக சபையின் ஊழியரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது.

தம்புள்ளை - கந்தளம பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு பேஸ்புக் ஊடாக ஒன்றிணைத்து இரவு முழுவதும் இந்த விருந்து இடம்பெற்றது.

இதில், பங்கேற்ற சம்பத் விஜயதுங்க என்ற இளைஞர் பாடியும் நடனமாடியும் இருந்தார். இவரே திடீரென உயிரிழந்தார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்தது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜே. வி. பிக்கு புத்திகூறியதற்காக இந்தியாவுக்கு நன்றி கூறுகிறோம்

## நிமல் லன்சா எம். பி.



கொழும்பு, பெப். 26

**இந்திய - இலங்கை உடன்படிக்கை முதற்கொண்டு எட்கா வரை இந்தியாவுடனான அனைத்து உறவுகளையும் கடந்த 40 ஆண்டு காலமாக எதிர்த்து வந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இன்று அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளது. இவ்வாறு ஜே.வி.பி.யை அழைத்து புத்தியுரைத்தமைக்கு இந்தியாவுக்கு நன்றி கூறுவதாக புதிய அரசியல் கூட்டணியின் ஸ்தாபகர் தலைவர்களில் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நிமல் லன்சா தெரிவித்தார்.**

உத்தேச பொதுத் தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சி தலைவர் யார் என்ற மோதலில் அநுரகுமார திஸநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸவுடன் தற்போது நாமல் ராஜபக்ஷவும் இணைந்துள்ளார். ஆனால், எமது புதிய அரசியல் கூட்டணி தெளிவான வேலைத்திட்டத்துடன் ஆட்சியைக் கைப்பற்றும் - என்றார்.

பெரமுன கட்சியிலிருந்து விலகியவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் நிறுவிய புதிய கூட்டணியின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு மாவட்டத்தில் முதன்முதலில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே நிமல் லன்சா மேற்கண்டவாறு தெரிவிதார்.

இதுவரை காலமும் பொய் வாக்குறுதிகளை வழங்கி, அவற்றை நிறைவேற்றுவதற்காக பணத்தை அச்சிட்டு நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கிய அரசியல் கலாசாரமே பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், புதிய கூட்டணியின் நோக்கம் அதுவல்ல. எதுவானாலும் உண்மையைக் கூறி மக்களுக்கு யதார்த்தத்தை புரிய வைப்பதே எமது நோக்கமாகும்.

ஜே. வி. பியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மேடைகளில் ஏறி பொய்களையே கூறிக்கொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சி தலைவர் தற்போது வழங்கி வரும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நாட்டிலுள்ள பணம் போதாது. எனவே, இவ்வாறு வார்த்தைகளால் அரசியல் செய்பவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. தகுதியான வர்களே ஆட்சியைப் பொறுப்பேற்க வேண்டும்.

கடந்த 40 ஆண்டு காலமாக இந்தியாவுடனான உறவை ஜே. வி.பி. எதிர்த்து வந்தது. இந்து - லங்கா, எட்கா என அனைத்தையும் எதிர்த்தது. ஆனால், அவர்களை அழைத்து அவர்களின் நிலைப்பாட்டை மாற்றியமைக்கு இந்தியாவுக்கு நன்றி கூறுகின்றோம். நாம் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். அந்த சந்தர்ப்பங்களில் இந்தியாவுக்கு எதிராக போலி பிரசாரங்களை மேற்கொண்டு வந்த ஜே.வி.பி. இன்று 'இந்தியாவும் மாறிவிட்டது, நாமும் மாறிவிட்டோம்' என்று கூறுகிறது. இதுவே அவர்களின் உண்மையான தோற்றம்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பொதுஜன பெரமுனவிலுள்ள தூய்மையான அரசியல்வாதிகள் எம்முடன் இணைவர். அனைவருடனும் இணைந்து வெற்றிக்கான எமது பயணத்தை மக்களின் ஆதரவுடன் தொடர்வோம் - என்றார். (ஐ)

# சுற்றுலாவிகளுக்கு எச்சரிக்கை விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, பெப். 26

நாட்டில் தங்கியிருக்கும் ரஷ்ய மற்றும் உக்ரைன் சுற்றுலா பயணிகள் 14 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற அறிவித்தல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்ய மற்றும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட வீசா நீடிப்புகளை இரத்துச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தீர்மானிக்கவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# உடலுக்கு தீங்கு ஏற்படுத்தவல்ல பூச்சிகொல்லி இறக்கியவர் கைது

கொழும்பு, பெப். 26

மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பூச்சுகொல்லி மருந்துகளை இறக்குமதி செய்த குற்றத்துக்காக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 14 கிலோ பூச்சி கொல்லிகள் கைப்பற்றப் பட்டுள்ளன. விற்பனை செய்யும் நோக்கில் இந்த பூச்சி கொல்லி மருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகத் தெரியவந்தது.

கைதானவர், நுவரெலியா - கந்தப்பளையை சேர்ந்த 50 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் காயம்!

கொழும்பு, பெப். 26

கொழும்பில் நேற்று நடந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார்.

ஜம்பட்டா தெருவில் கோழி இறைச்சி கடையை நடத்தி வருபவரான மொஹமட் ரில்வான் (வயது 57) என்பவரே இந்த சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் கடையில் நாற்காலியில் அமர்ந்திருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் அருகில் வந்து ரிவோல்வர் ரக துப்பாக்கியால் மூன்று தடவைகள் சுட்டார் என்றும், அதில் ஒருவர் அவரைத் தாக்கினார் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

# பொலிஸ் தடுப்பு காவலில் மரணம்! விசாரணை எதுவும் நடக்கவில்லை!

## உறவினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 26

பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரின் மரணம் தொடர்பில் இதுவரை எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனைக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிய வந்துள்ளது.

இந்த மரணத்துக்குக் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை என உயிரிழந்தவரின் சகோதரர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த சந்தேக நபர் நகை திருடிய குற்றத்திற்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஜனவரி 14ஆம் திகதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மகாநாயக்க தேரர்கள் குழு மகிந்தவுடன் இரகசிய சந்திப்பு

கொழும்பு, பெப். 26

தேசிய வளங்களை வெளிநாட்டினருக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முன்னணி தேரர்கள் குழு கேட்டுள்ளது.

மகாநாயக்க தேரர்களும் இது தொடர்பில் தமது கொள்கையை வெளிப்படுத்தியுள்ளனர்.

முலும், போரில் நாட்டைக் காப்பாற்றிய தலைவர் என்ற ரீதியில் அதற்கு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியது மகிந்த ராஜபக்ஷவின் பொறுப்பாகும் என்றும் அந்தக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படாத கொழும்பில் உள்ள பிரதான விகாரையில் நடந்த சந்திப்பிலேயே இந்த வேண்டுகோள்களை பிக்குகள் குழு முன்வைத்தது.

முன்னாள் ஜனாதிபதியுடன் பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த 8 முக்கியஸ்தர்களும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அத்துடன், இதில் கலந்துகொண்ட தேரர்கள் நாட்டின் முன்னணி மகாநாயக்க தேரர்களும் அடங்குவர் என்று தெரிய வருகின்றது.

கட்டுநாயக்கா, மத்தள, இரத்மலானை விமான நிலையங்கள் போன்ற தேசிய பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமான அரச நிறுவனங்களை வெளிநாட்டவர்களுக்கு மாற்றுவது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் - என்றும் தேரர்கள் குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# அதிவேகம் இளைஞர் உயிருக்கு எமனானது

கொழும்பு, பெப். 26

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் 19 வயது இளைஞர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

அநுராதபுரம் - கலென்பிந்துனுவெவ - கெட்டலாவ பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் அதன் கட்டுபாட்டை இழந்ததால், வீதியை விட்டு விலகி, வீதியோரத்தில் இருந்த சுவரில் மோதியுள்ளது.

படுகாயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

# ஹெரோயினுடன் ஐவர் கைது!

கொழும்பு, பெப். 26

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த பெண் ஒருவர் உட்பட ஐவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கொலன்னாவையுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நடத்திய சோதனையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது. இதில்,12 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)


# பதில் பொலிஸ் மா அதிபருக்கு சேவை நீடிப்பு வழங்க தீர்மானம்!

கொழும்பு, பெப். 26

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்குவதற்காக அரசமைப்பு பேரவைக்கு முன்மொழிவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

தேசபந்து தென்னகோன் கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

3 மாத காலத்துக்கு வழங்கப்பட்ட நியமனம் இம்மாதம் 29 ஆம் திகதி நிறைவடைகிறது. இந்த நிலையிலேயே மீளவும் சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். (ஐ)



# இன நல்லிணக்க வேலைதிட்டம் மார்ச்சில் மீண்டும் ஆரம்பமாகும்

## அம்பாறையில் நீதி அமைச்சர் தெரிவிப்பு



**அக்கரைப்பற்று, பெப். 26**

**இன நல்லிணக்கம் தொடர்பான வேலைத்திட்டம் மீண்டும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இரு நாள் பயணமாக அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்.

இதன்போது, அவர் தீகவாபி ரஜமஹா விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் இன நல்லிணக்கம் தொடர்பான வேலைத்திட்டம் மீண்டும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இங்கு நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அனுராத ஜெயரத்னவும் கலந்துகொண்டதுடன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.ஜெகதீசன், அட்டாளச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபிர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# கால்நடை வளர்ப்பாளர் பொறியில் சிக்கிப் பலி!

*திருக்கோவில், பெப். 26*

திருக்கோவிலை சேர்ந்த கால் நடை பராமரிப்பாளர் ஒருவர் பொறியில் சிக்கி உயிரிழந்தார்.

மொனராகலை - சிம்பலாண்டுவை - அத்திமலை பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாடுகளை மேய்க்கச் சென்ற போதே நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருக்கோவில் காயத்ரி கிராமத்தை சேர்ந்த மோகனராசா சசிகுமார் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

# காத்தான்குடியில் பரிசளிப்பு

*காத்தான்குடி, பெப். 26*

காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும் ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் பள்ளிவாசலின் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஓமான் நாட்டுக்கான முன்னாள் தூதுவரும் வெளிநாட்டமைச்சின் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் அமீர் அஜ்வத், தென் கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் துறைப் பேராசிரியர் கலாநிதி முஸ்தபா, காத்தான்குடி நகர சபை முன்னாள் தவிசாளர் எஸ்.எச். அஸ்பர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், கல்வியில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# குழந்தையை கைவிட்டு தலைமறைவான ஜோடி

*கொழும்பு, பெப். 26*

மட்டக்களப்பை சேர்ந்த ஜோடி ஒன்று தமது 5 மாத குழந்தையை லயன் அறை ஒன்றில் விட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளது.

கண்டி - கலஹா - லூல்கந்துர தோட்டத்திலுள்ள அறையில் விட்டுவிட்டு தலைமறைவான ஜோடி மட்டக்களப்பு - வாகரையை சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மனநலம் பாதிக்கப்பட்ட மூதாட்டி ஒருவர் அந்த அறையில் இருந்தார் என்றும், அவருடன் ஒருநாள் தங்கியிருந்த இந்த மட்டக்களப்பு ஜோடி, அங்கு தமது குழந்தையை கைவிட்டு தப்பிச் சென்றது.

இந்த ஜோடி வெளிநாட்டுக்கு சென்றுள்ளதாகக் கூறப்படும் நிலையில், மீட்கப்பட்ட குழந்தை கலஹா மருத்துவமனையில் பராமரிப்புக்காக சேர்க்கப்பட்டுள்ளது. (ஐ)

# திருக்கோணேஸ்வர பெருமானின் நகர்வலம் வழமைபோல் நடக்கும்

*திருகோணமலை, பெப். 26*

சிவாராத்திரியை முன்னிட்டு திருக்கோணஸ்வர நாதரின் நகர் வலம் வழக்கம் போன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மகா சிவராத்திரியை முன்னிட்டு திருக்கோணேஸ்வர பெருமான் 4 நாட்கள் நகர் வலம் வருவது வழமை. ஆலயத்தில் எழுந்துள்ள நிர்வாக ரீதியான சிக்கலால் ஆலய நிர்வாகக் குழுவுக்கு நீதிமன்றம் தடை ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில், இது சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கோணேஸ்வர பெருமானின் நகர் வல திருவிழாவை பாதிக்கும் என்று அச்சம் எழுந்தது. இந்த நிலையிலேயே, நகர்வல திருவிழா வழக்கம் போன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காதலியுடன் விடுதியில் தங்குவதற்கு கடையில் திருடிய இளைஞர் கைது!

*அக்கரைப்பற்று, பெப். 26*

காதலியுடன் விடுமுறையை களிக்க வந்த இளைஞர் விடுதிக்கு செலுத்த பணம் இல்லாததால், கடையில் திருடியுள்ளார். அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

தனது காதலியுடன் பதுளையிலிருந்து இளைஞர் அம்பாறைக்கு வந்துள்ளார். இருவரும் விடுதியில் தங்கத் தீர்மானித்துள்ளனர். ஆனால், இளைஞரிடம் பணம் இருக்கவில்லை.

இந்த நிலையில், காதலியை அம்பாறை பேருந்து நிலையத்தில் காத்திருக்குமாறு கூறியவர், நகரின் பிரபல மொத்த விற்பனை நிலையத்துக்குள் நுழைந்து பணத்தைத் திருடியுள்ளார்.

ஆனால், இதில் சிக்கிய இளைஞர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பேருந்து நிலையத்தில் காத்திருந்த அவரின் காதலி பொலிஸாரால் மீட்கப்பட்டு அவரின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

## கிழக்கு நட்புறவு ஒன்றியம்;

# 30 வருட நிறைவையொட்டி மக்கள் நலன்சார் திட்டங்கள்

*நிந்தவூர், பெப். 26*

கிழக்கிலங்கையில் சமூக நலனோம்பு செயற்திட்டங்களை முன்னெடுத்துவரும் பிரபல தன்னார்வ நிறுவனமான கிழக்கு நட்புறவு ஒன்றியம், தமது முப்பது வருட நிறைவையொட்டி மக்கள் நலன்சார்ந்த பல செயல் திட்டங்களை முன்னெடுக்கவிருக்கின்றது.

அம்பாறை - சாய்ந்தமருது நகரில் தலைமையகத்தையும் பிரபல சமூக சேவையாளரும் பொறியியலாளருமான எம். எம். நஸீரை தவிசாளராகவும் கொண்டு நற்பணிகள் ஆற்றிவரும் கிழக்கு நட்புற ஒன்றியம் இந்த வருட இறுதியில் தமது முப்பது வருட நிறைவைக் கொண்டாடுகின்றது.

மேற்படி முப்பது வருட நிறைவை முன்னிறுத்தியே மக்கள் நலன் சார்ந்த முக்கிய செயல் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் பொறியியலாளர் நஸீர் தெரிவித்தார்.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பொன்று சாய்ந்தமருதில் தவிசாளர் பொறியியலாளர் நஸீர் தலைமையில் நடைபெற்றபோது, தவிசாளர் உட்பட உப தவிசாளர் எம்.எம். ஜுனைடீன், நிருவாகப் பணிப்பாளர் யூ.எல்.எம்.பைஸர் (பிரதம தபாலதிபர்), நிதிப் பணிப்பாளரும், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல். எம்.சலீம் ஆகியோர் முக்கிய திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தனர்.

இதன்படி 30 க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக்காக இருவருடங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் (மாதாந்தம்) புலமைப்பரிசில் வழங்குதல், ஊனமுற்றோர் 30 பேருக்கு




அவர்களுக்கான செயல்பாட்டு உபகரணங்கள் வழங்குதல் (தள்ளுவண்டிகள் போன்றவை),

தலா 30 குடும்பத்தினருக்கு மின்சார மற்றும் குடிநீர் இணைப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஒன்றிய தவிசாளர் பொறியியலாளர் நஸீர் தெரிவித்தார்.

மேலும், ஏற்கனவே 50 மில்லியன் செலவில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஒன்றியத்தின் தலைமைச் செயலகக் கட்டிட நிர்மாணப்பணிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக நிதிப் பணிப்பாளர் ஏ. எல். எம். சலீம் தெரிவித்தார்.

நிருவாகப் பணிப்பாளர் யூ. எல்.எம்.பைஸர் (பிரதம தபாலதிபர்) இந்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடுகையில்,

சுனாமி, கொரோனா போன்ற அனர்த்த காலகட்டங்களில் கிழக்கு நட்புறவு ஒன்றியம் பாதிக்கப்பட்ட மக்கள் நலன் சார்ந்த முன்னெடுத்த ஒன்றியத்தின் வேலைத்திட்டங்களையும், கடந்த 30 வருடகால சேவைத் திட்டங்கள் குறித்தும் விளக்கினார்.

உபதவிசாளர் எம்.எம். ஜுனைடீன் தெரிவிக்கையில், 30 வருட நிறைவுக்காகத்திட்டமிடப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள் தாமதமின்றி செயற்படுத்தப்படவுள்ளதாகவும் காலக்கிரமத்தில் மேலும் பல சேவைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை ஒன்றியத்தின் 30 வருட நிறைவு விழாவைப் பல்வேறு சமூக நலத்திட்டங்களுடன் கொண்டாடவிருப்பதுடன், பெரும்பாலும் நிர்மாணிக்கப்படவிருக்கும் செயலக கட்டிடத்தொகுதியிலேயே இவை தொடர்பான நிறைவு விழாவை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் ஒன்றியத்தலைவர் பொறியியலாளர் நஸீர் மேலும் தெரிவித்தார். (ஐ-06)

அமெரிக்கா - பிரிட்டன் கூட்டு நடவடிக்கை

# ஹூதிகளின் 18 தளங்கள் விமான தாக்குதலில் அழிப்பு!




**வாஷிங்டன், பெப். 26**

**யேமனில் உள்ள 18 ஹூதி தளங்கள் மீது அமெரிக்கா, பிரிட்டன் போர் விமானங்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளன என்று அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்ரகன் தெரிவித்துள்ளது.**

இந்தத் தாக்குதல் நட்பு நாடுகளின் நான்காவது கூட்டு நடவடிக்கை என்றும் அது கூறியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், ஹூதிகளின் ஆயுதக் களஞ்சியங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. அத்துடன், ஏவுகணை சேமிப்பகம், வான்வழி பாதுகாப்பு அமைப்புகள், ராடர் தளங்களும் அழிக்கப்பட்டன என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

செங்கடல் வர்த்தகப் பாதையில் கப்பல் போக்குவரத்து மீது ஈரான் ஆதரவு ஹூதிகள் தொடர் தாக்குதல்களை நடத்துகிறது. ஹூதி போராளிகள் அமைப்பு யேமனின் தலைநகர் சனா உட்பட பெரும்பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இஸ்ரேல் காஸா மீது தொடுத்த போருக்கு பழிவாங்கும் விதத்திலேயே கப்பல் போக்குவரத்தில் மிகமுக்கியமான செங்கடலில் மேற்கு நாடுகளுக்கு எதிரான தாக்குதலை ஹூதிகள் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# 2400 வருடங்கள் பழமையான ட்ரகன் சீனாவில் கண்டறிவு!

*பீஜிங், பெப். 26*

*சீனாவில் சுமார் 2 ஆயிரத்து 400 ஆண்டுகள் பழமையான ட்ரகன் போன்ற விலங்கின் உடலமைப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*இந்த அமைப்பு 2003ஆம் ஆண்டு முதன்முதலில் தெற்கு சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.*

*ட்ரகன் போன்ற விலங்கின் அமைப்பு 16 அடி நீளம் கொண்டதாகவும் கடந்த காலத்தில் வாழ்ந்ததாக நீர்வாழ் உயிரின அமைப்பு எனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.*

*இந்து விலங்கின் கழுத்து பகுதியை வைத்து ட்ரகன் விலங்காக இருக்கலாம்.*

*இந்த விலங்கு அறிவியல் ரீதியாக “டைனோசெபலோசரஸ் ஓரியண்டலிஸ்” என்று அழைக்கப்படுகிறது. (ஐ)*

Google Pay

# ‘கூகுள் பே’ சேவையை நிறுத்துகிறது ‘கூகுள்’!

*நியூயோர்க், பெப். 26*

*கூகுள் நிறுவனத்தின் பே அப்ஸ் என்ற செயலி உலகம் முழுவதும் இயங்கி வருகிறது.*

*இதன் மூலம் பணப் பரிவர்த்தனை செய்ய முடியும். இந்த செயலியை உலகம் முழுவதிலும் கோடிக்காணக்கானவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.*

*இந்த கூகுள் பே அப்ஸை எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி முதல் நிறுத்தப்படும் என்று கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. அமெரிக்காவில் மட்டுமே இந்த சேவை நிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*கூகுள் வோலட் சேவை பயன்பாடு அதிகரிப்பாலேயே கூகுள் பே சேவை நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.*

# பிரான்ஸின் தேசிய கொடியை சாத்தான் என்றுகூறிய மதகுரு நாடு கடத்தப்பட்டார்

*பாரிஸ், பெப். 26*

*பிரான்ஸ் நாட்டின் தேசிய கொடியை மறைமுகமாக குறிப்பிட்டு சாத்தான் என்று கூறிய இஸ்லாமிய மதகுரு நாடு கடத்தப்பட்டார்.*

*பிரான்ஸில் சுமார் 40 ஆண்டுகள் வசித்துவந்த துனீசிய நாட்டவரான இஸ்லாமிய மத குரு ஒருவர் அவரின் வதிவிட உரிமை பறிக்கப்பட்ட பின் கைதுசெய்யப்பட்டு சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.*

*பிற்போக்கான, சகிப்புத்தன்மையற்ற மற்றும் வன்முறையைத் தூண்டும் விதமான கருத்துக்களைத் தனது சமயப் பிரசங்கங்கள் ஊடாகப் பரப்பினார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.*

*மஹ்ஜூப் மஹ்ஜூபி என்ற 52 வயதான இஸ்லாமிய மதகுருவே பாரிஸில் இருந்து விமானத்தில் துனீசியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். 1980 முதல் பிரான்ஸில் வசித்து வரும் அவருக்கு திருமணமாகி ஐந்து பிள்ளைகள் உள்ளனர். பிள்ளைகள் அனைவரும் பிரான்ஸின் குடியுரிமை பெற்றிருந்த போதிலும் அவர் வதிவிட உரிமையுடன் மட்டுமே நீண்ட காலம் இங்கு வசித்து வந்துள்ளார். அவரது வதிவிட உரிமையை உள்துறை அமைச்சர் ரத்துச் செய்துள்ளார்.*



*கடைசியாக மதகுரு வெளியிட்டிருந்த காணொலி பிரசங்கம் ஒன்றில் பிரான்ஸின் மூவர்ணத் தேசியக் கொடியை “மூவர்ணம்” என்று மட்டும் குறிப்பிட்டு அதனைச் “சாத்தான்” என்று கூறியும் அல்லாஹ்வுடன் ஒப்பிட்டால் அதற்கு “எந்தப் பெறுமதியும் கிடையாது” எனவும் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டிருந்தார் என்று கூறப்படுகிறது.*

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்:

# தென் கரோலினாவிலும் ட்ரம்ப் வெற்றி பெற்றார்

வாஷிங்டன், பெப். 26

அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடன் தற்போது உள்ளார். அவரின் பதவிக் காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் நிறைவடைகிறது. இந்த நிலையில், நவம்பரில் அங்கு தேர்தல் நடக்கவுள்ளது.


ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவேண்டும். அதற்கு மாகாணங்கள் தோறும் வாக்குப்பதிவு நடைபெறும். இரு கட்சிகள் சார்பிலும் நடக்கும் மாநாட்டில் தெரிவாகும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்வர்.



குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்காக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்திய வம்சாவளியும் - தென் கரோலினா மாகாண முன்னாள் ஆளுநருமான நிக்கி ஹாலே இடையே போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், தென் கரோலினா மாகாணத்தில் நடந்த தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார்.

முன்னதாக, நியூ ஹாம்ப்ஷையர் மற்றும் லோவா காகசஸ் மாகாணங்களில் நடந்த தேர்தலிலும் ட்ரம்ப் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சூரிய வெப்ப சிதறலை படம்பிடித்தது நாஸா!

நியூயோர்க், பெப். 26

சூரியனில் ஏற்பட்ட வெப்ப சிதறலை நாஸா படம் பிடித்துள்ளது.

சூரியனை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா ‘சோலார் டைனமிக்ஸ்’ என்ற ஆய்வு விண்கலத்தை அனுப்பியது. இந்த விண்கலமானது கடந்த 2010ஆம் ஆண்டு முதல் சூரியனை ஆய்வு செய்து பல்வேறு தகவல்களை பூமிக்கு அனுப்பி வருகிறது.

இந்த நிலையில், சூரியனின் இடது பக்கத்தில் ஏற்பட்ட வெப்ப சிதறலை இந்த விண்கலம் தற்போது புகைப்படம் எடுத்துள்ளது. இதுபோன்ற சூரியச்சிதறல்கள் தொலைத் தொடர்பு, மின்சேவைகளை பாதிக்கக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



# மூத்த சகோதரனாகவே இந்தியாவை பார்க்கிறோம்!

## வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, பெப். 26

**இந்தியாவை ஒரு மூத்தசகோதரனாக இலங்கை கருதுகிறது என்று தெரிவித்துள்ள வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரகபாலசூர்ய 2048ஆம் ஆண்டுக்குள் நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் உள்ள இந்தியாவின் முன்மாதிரியை அறிந்துகொள்ள இலங்கை விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், இந்தியாவுடன் எங்களுக்குள்ளது நாகரிக தொடர்பு. ஆகவே இந்தியா சீனாவுடனான எங்களின் உறவுகள் குறித்து அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை - என்றும் இந்திய ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியா ஓர் அபிவிருத்தியடைந்த நாடு என்ற நிலையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில் இந்தியா அதனை எவ்வாறு சாதித்தது என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றோம். 2048ஆம் ஆண்டுக்குள் அபிவிருத்தியடைந்த நாடாக மாறவிரும்புகின்றோம். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அதிகளவான பொருளாதார வாய்ப்புகள் உள்ளன.

நாங்கள் எந்த நாட்டுடனும் வர்த்தகத்தில் ஈடுபடத் தயார். ஆனால், இந்தியாவை பொறுத்தவரை நாங்கள் விசேட உறவுகளை கொண்டுள்ளோம் என தெரிவித்துள்ளார். இந்தியாவுடன் எங்களுக்குள்ளது நாகரிக தொடர்பு. ஆகவே இந்தியா சீனாவுடனான எங்களின் உறவுகள் குறித்து அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. சீனாவுடன் மாத்திரமல்ல நாங்கள் மேற்குலகத்துடனும் சிறந்த உறவுகளை கொண்டுள்ளோம்.

இலங்கை ஒரு சிறிய நாடு எங்களுக்குப் பெரும் அரசியல் அபிலாசைகள் இல்லை. நாங்கள் எந்த நாட்டின்மீதும் படையெடுக்கப் போவதில்லை இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெறுவதையும் இலங்கை மக்களினது வாழ்க்கைதரம் உயர்வதையும் உறுதி செய்ய விரும்புகின்றோம் - என்றார். (ஐ)



# யுக்திய நடவடிக்கைக்காகச் சென்ற பொலிஸாரின் மோ. சைக்கிள் எரிப்பு!

கொழும்பு, பெப். 26

யுக்திய நடவடிக்கைக்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளை சிலர் தீயிட்டு எரித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கதிர்காமம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் சிவில் உடையில் ரஜமாவத்தை பகுதிக்கு யுக்திய நடவடிக்கைக்காக சென்றிருந்தனர். அப்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்த ஒருவரை கைது செய்வதற்காக சென்ற பொலிஸாரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு எரியூட்டப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புதையுண்ட நிலையில் புராதன நிர்மாணங்கள்!

## பொலநறுவை ஆய்வில் தகவல்

கொழும்பு, பெப். 26

பொலநறுவையில் பல புராதன நிர்மாணங்களின் எச்சங்கள் நிலத்தின்கீழே புதைந்துள்ளன என்பது நவீன கருவி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட நிலத்தின் கீழே 5 மீற்றர் ஆழம் வரையான பகுதியை அவதானிக்கக்கூடிய ராடர் கருவி மூலமே இது கண்டறியப்பட்டுள்ளது.

புதிய ஆய்வின் மூலம் புராதன நகரமான பொலநறுவை அடிப்படையில் பல முக்கிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பல நிர்மாணங்கள் இன்னமும் புதைந்துள்ளன.

மேலும், இந்தப் புதிய ஆய்வின் மூலம் பொலநறுவையின் வரலாறு தொடர்பான மேலும் மறைக்கப்பட்ட தகவல்களை கண்டறியப்படும். இது தொடர்பில் ஆய்வு குழு ஒன்று பொலநறுவையில் முகாமிட்டுள்ளது என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# வீதி விபத்துகளை குறைக்க 54 நிறுவனங்கள் யோசனை!

கொழும்பு, பெப். 26

நாட்டில் வீதி விபத்துகளை குறைப்பதற்கான யோசனைகள் 54 நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளன என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இதன்படி, 12 பாடசாலைகள், 19 பல்கலைக்கழகங்கள் மற்றும் 2 நிறுவனங்களிடமிருந்து 8 திறந்த முன்மொழிவுகள் கிடைத்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகளில், பாதசாரிகளின் பாதுகாப்பு மற்றும் வீதி விபத்துகள் அடிக்கடி இடம்பெறும் பகுதிகளுக்கான தீர்வுகள் உள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

# சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களில் இரண்டாவது இடத்தில் இலங்கை!

## எதிர்க்கட்சி தலைவர் வேதனை

கண்டி, பெப். 26

கடந்த காலங்களில் பெண்களால் தேவேந்திர முனையிலிருந்து பேதுரு முனை வரை சிரமமின்றி பயணிக்க முடியுமாக இருந்தாலும் இன்று நாட்டில் அவ்வாறானதொரு நிலை இல்லை. சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 2023இல் மட்டும் 9,400 குற்றங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 1,502 பாலியல் வன்புணர்வுகள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“நமது நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளாகின்றனர். பெண்களுக்கு பரிதாபகரமானதும் துயரமானதுமான நிலையே நிலவி வருகிறது. இது மாற்றப்பட வேண்டும் - என்றார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடந்த ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,




நமது நாட்டில் சரியான பாதுகாப்பு, பொருத்தமான சூழல் மற்றும் கவனிப்பு இல்லாத காரணத்தால் தொழிலாளர் பரப்பில் 34வீத பணியாளர்களே பெண்களாக உள்ளனர். பெரும்பாலான பெண்கள் வீட்டிலும், போக்குவரத்தின் போதும், பணியிடத்திலும் பல துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். பொருளாதார நெருக்கடி கூட பெண்களை அழுத்தத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

வீட்டின் தெய்வம் தாய் என்று அழைக்கப்பட்டாலும், குழந்தையின் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் தாய் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவை கடுமையான பிரச்சினையாக இன்று மாறியுள்ளன. மகளிர் தின கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டாலும், அதில் வாக்குறுதியளிக்கப்பட்ட எதுவும் இது வரை நடக்கவில்லை.

2019 ஜனாதிபதித் தேர்தலில் பெண்களைப் பற்றி யாரும் பேசாவிட்டாலும், பெண்களுக்கு மட்டுமான தனியான சாசனத்தை நான் தயாரித்தேன். இன்றைய அரசியலிலும் ஜனநாயகத்திலும் முக்கிய அடிமட்ட சக்தியாக பெண்கள் கருதப்பட்டாலும், பெண்கள் தற்போது வெறுமனே அரசியல் ஆயுதமாக்கப்பட்டுள்ளனர்.

இந்நாட்டில் உள்ள 52 வீத பெண்கள் அரசியல்வாதிகளிடம் இருந்து சிறப்புரைகளையோ, வியாக்கியானங்களையோ எதிர்பார்க்கவில்லை. பிரச்னைகளுக்கு தீர்வுகளையும் பதில்களையுமே எதிர்பார்க்கின்றனர். எனவே புகழ்ச்சி கதைகள், வாய்வீறாப்பு கதைகளைக் கண்டு, கேட்டு ஏமாற வேண்டாம் - என்றார். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தொடர்பில் அமெரிக்க இராஜாங்க செயலர் கரிசனை!

கொழும்பு, பெப். 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணகளின் அவசியத்தை அமெரிக்காவின் முகாமைத்துவம் மற்றும் வளங்கள் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சட் வெர்மா வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார நெருக்கடி உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் நல்லிணக்கம் போன்ற வழமையான விவகாரங்களுக்கு அப்பால் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணகள் குறித்தும் வெர்மா ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பின் போதும் பின்னர் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போதும் ரிச்சட் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் குறித்து அக்கறை காண்பித்திருந்தார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தனக்கு தெரிந்த ஒருவரை வெர்மா இழந்தார் எனவும் இதன் காரணமாக விசாரணைகள் குறித்து தனிப்பட்ட முறையில் வலியுறுத்தினார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளுக்காக அமெரிக்காவின் உதவியை நாடியதாகவும் தனது தரப்பிலிருந்து விசாரணைகள் முடிவடைந்துவிட்டன என அமெரிக்கா அறிவித்துள்ளதாகவும் இலங்கை தரப்பிலிருந்து அமெரிக்க அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது. எனினும், அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகள் விரைவில் பூர்த்தியாவதை விரும்புவதாக ரிச்சர்ட் வெர்மா கூறியிருந்தார். (ஐ)

## சிறந்த...

இடம்பிடித்துள்ளன.

இதன் மூலமாக பாடசாலையின் அதிபராக பணியாற்றுவோர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமனான எஸ். எல். ஈ. எஸ். தரம் 1ஐ சேர்ந்தவராக இருக்க வேண்டும். அத்துடன், பிரதி அதிபர்களாக இருவர் கடமையாற்றுவர். இவர்கள் எஸ். எல். ஈ. எஸ். தரம் 3ஐ சேர்ந்தவர்களாக இருப்பர். (ஐ)

## ஒரு இலட்சம்...

பாடசாலைகளையும் உள்ளடக்கி தரம் 01 முதல் தரம் 11 வரை கல்வி கற் கும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு வருடாந்தம் இந்த நிதி உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்காக, 360 கோடி ரூபாயை ஜனாதிபதி நிதியம் ஒதுக்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்தில்கொண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் பாடசாலை உபகரணங்கள், பயிற்சி புத்தகங்களைப் பெற்றுக்கொள்வது மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல் போன்ற விடயங்களில் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

ஒவ்வொரு பாடசாலையிலும் மிகக் குறைந்த வசதியுடைய திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து, அந்தப் பிள்ளைகளுக்கு கல்வி கற்றலுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இந்த நாட்டு மாணவர்களுக்கு தொடர்ச்சியான பாடசாலை கல்வியை வழங்கி, அதன் ஊடாக நாட்டின் மனித வளத்தை மேம்படுத்த முதலீடு செய்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பு.

இதன்படி, இந்தப் புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்யும் செயல்முறை மற்றும் அது தொடர்பான அனைத்துத் தகவல்களும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கமான www.facebook.com/president.fund மூலம் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கட்சி...

என்று அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. ஆனாலும், இலங்கை மத்திய வங்கி தமது ஊழி யர்களின் சம்பளத்தை அதிகரித்ததில் எவ்வித நியாயமும் இல்லை.

நாட்டின் வீழ்ச்சி தொடர்பில் அதிகாரிகளுக்கும் பொறுப்பு இருப்பதாக தெரிவித்த முன்னாள் அமைச்சர், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அதிகாரிகள் திட்டமிட்டு அதிகளவில் தலையீடு செய்ய வேண்டும். அவ்வாறான நிலை தற்போது தென்படவில்லை என்றும் கூறினார். (ஐ)

## உத்தியோகபூர்வ...

சப்ரி தலைமையிலோ அல்லது வேறெந்த உத்தியோகபூர்வமான அமைச்சர்கள் தலைமையிலான குழுவினரோ இம்முறை செல்ல மாட்டார்கள் என்று அரசாங்கத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இலங்கையில் ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பிலான முன்னேற்றகரமான விடயங்கள் தொடர்பில் ஜெனிவாவில் உள்ள வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருண திலகவே விடயங்களை கையாளவுள்ளார்.

குறிப்பாக, இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் வாய்மூல அவதானிப்பு அறிக்கை மார்ச் 4ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனையடுத்து, ஜெனிவாவுக்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக அந்த வாய்மொழி அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக பதிலளிப்பை வழங்குவார்.

அத்துடன், பல்வேறுபட்ட பக்க நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்று கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார். இதேநேரம், அவருக்கான சகல ஒத்துழைப்புகளையும் வெளிவிவகார அமைச்சு வழங்கும் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தல் வாக்குச்சீட்டில் மொட்டு சின்னம் நிச்சயம் இருக்கும்

## பெரமுனவின் சாகர தெரிவிப்பு

கொழும்பு, பெப். 26

சிறீ லங்கா பொதுஜன பெரமுன இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நிச்சயமாக முன்வைக்கும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கெஸ்பேவ பிரதேசத்தில் நடந்த கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை முன்னிறுத்துவோம். யார் வேட்பாளர் என்பதை நாங்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை.

யாரை வேட்பாளராக தெரிவு செய்வது என்று இன்னும் முடிவு செய்யவில்லை.

ஆனால், கட்சியின் செயலாளர் என்ற வகையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வாக்குச்சீட்டில் மொட்டு சின்னம் இடம் பெறும் என்பதை என்னால் மிகுந்த நம்பிக்கையுடன் கூற முடியும் - என்றார். (ஐ)

# 15 வயது சிறுமி கடத்தல்; காதலன் கைதானார்!

மட்டக்களப்பு, பெப். 26

மட்டு. - கொக்குவில் பொலிஸ் பிரிவில் 15 வயது சிறுமியை கடத்திச் சென்ற 18 வயது இளைஞனையும் அவரின் சிறிய தாயாரையும் பொலிஸார் வாகரையில் வைத்து சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

கடத்தப்பட்ட சிறுமி மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் பொலிஸ் பிரிவில் வசித்து வந்த சிறுமி கடந்த 7ஆம் திகதி பாடசாலைக்கு சென்ற நிலையில் அவர் வீடு திரும்பாததையடுத்து அவரது உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இதையடுத்து கொக்குவில் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையின் போது குறித்த சிறுமியை அவரின் காதலன் வாகரைப் பிரதேசத்திலுள்ள அவரது சிறியதாயாரின் வீட்டுக்கு கடத்திச் சென்று வைத்துள்ளமை தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த வீட்டை சுற்றுவளைத்த பொலிஸார் சிறுமியை மீட்டதுடன் கடத்தல் குற்றச்சாட்டில் 18 வயதுடைய காதலனையும் அவருக்கு உடந்தையாகச் செயற்பட்ட 47 வயதுடைய சிறிய தாயாரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## பெரும்பான்மை...

உங்களுக்குத் தெரியும்- இனமோதலுக்கு முன்னர் நாங்கள் பாதுகாப்பு செலவினங்களுக்காக மிகவும் குறைவாகவே 0.5வீதமே செலவிட்டோம்.

இது, 1985 இல் மூன்று வீதமாக அதிகரித்தது பின்னர் பத்து வருடங்களின் 1995 இல் 5.9 வீதமாக அதிகரித்தது. 1985 இல் எங்களின் பாதுகாப்பு செலவினம் 18. 8 கோடி டொலர் 2008 இல் இது 150 கோடி டொலராக மாறியது.

1980-90களில் எங்களின் சமூக அபிவிருத்தி சுட்டிகள் ஏனைய தெற்காசிய நாடுகளை மிகவும் சிறப்பானவையாக காணப்பட்டன. நாங்கள் அபிவிருத்திக்காக செலவிட்டிருக்க கூடியவற்றை பாதுகாப்புக்காக செலவிட்டோம்.

இலங்கையை பொறுத்தவரை நாங்கள் அனைவரும் ஜனநாயகம் குறித்து நம்பிக்கை கொண்டுள்ள போதிலும் நாங்கள் பெரும்பான்மை வாதம் குறித்து அவதானமாக இருக்க வேண்டும். 1970களில் இலங்கையில் கல்வி சீர்திருத்தம் முன்னெடுக்கப்பட்ட போது, அது சில சமூகத்தினர் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படும் நிலையை ஏற்படுத்தியது. இது அந்த சமூகத்தினர் ஆயுதங்களை ஏந்தும் நிலையை ஏற்படுத்தியது.

ஆகவே, நாங்கள் மிகவும் கவனமாகயிருக்கவேண்டும் ஜனநாயகத்தில் பெரும்பான்மை என்பதை நாங்கள் நம்புகின்ற போதிலும் அபிவிருத்தி என்பது அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியாக காணப்படவேண்டும். சமூகத்தின் ஒரு பகுதியினருக்கான அபிவிருத்தியாக மாத்திரம் அது காணப்படமுடியாது.

ஒரு நாடாக முன்னோக்கி செல்வதற்கும் - நாங்கள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளவேண்டும், நாங்கள் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளாவிட்டால் அரசியல்வாதிகள் பெரும்பான்மை வாதம் என்ற துருப்புச்சீட்டை பயன்படுத்துவார்கள். ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தை மாத்திரம் கவரும் நோக்கத்துடன் செயற்படுவார்கள்- என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

## ஜனாதிபதி...

திரும்புவார் என்று கூறப்பட்டது. ஆனால், அவர் இன்றுவரை நாடு திரும்பவில்லை. இந்த நிலையில், அவர் இந்த வாரம் நாடு திரும்புவார் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி கூறியுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளரை மையப்படுத்தி ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளை சரி செய்யவே பஸில் அவசரமாக நாடு திரும்புகிறார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், நாடு திரும்பும் பஸில் ராஜபக்ஷ வரும் ஞாயிற்றுக் கிழமை ஜனாதிபதி ரணிலை சந்தித்து பேச்சு நடத்துவார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## செங்கடல்...

செய்துவிட்டு நாடு திரும்புகிறது என்று அவர் கூறினார்.

அத்துடன், விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் பின்னர் இலங்கை கடற்படை முன்னெடுத்த ஆபத்தான இந்த நடவடிக்கையின் இரகசிய தன்மை காரணமாக கடற்படை மேலதிக தகவல்களை வெளியிடவில்லை என்று தென்னிலங்கையின் பிரபல ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

மீண்டும் எப்போது இலங்கை கடற்படை தனது கப்பலை அனுப்பும் என்பது குறித்தும் இலங்கை கடற்படை எதனையும் தெரிவிக்கவில்லை.

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக - பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் போக்குவரத்தின் மிக முக்கியமான செங்கடலில் பயணிக்கும் கப்பல்களை தாக்கி வருகிறார்கள். இதற்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் போர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

முன்னதாக இந்தப் போர் நடவடிக்கையில் இலங்கையும் பங்கெடுக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வாறான நடவடிக்கையில் கடற்படை ஈடுபடாது என்றவாறான தகவல்கள் பின்னர் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழினத்துக்கு...

வலியுறுத்தல் என்பது எவ்வளவு அவசியமானதோ அந்தளவுக்கு அரசியல் கட்சிகளின் ஒற்றுமையும் மிகமிக அவசியமானது. கூட்டாக இருந்த கட்சிகள் பிரிந்த காலம் போய் ஒரு கட்சிக்குள்ளேயே பெரும் பிளவு ஏற்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை கட்சிகள் தங்களுக்கு ஏற்றால்போல் முடிவு செய்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் சில கேள்விகளை கேட்க விரும்புகின்றேன்.

நீங்கள் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்றீர்களா? தமிழ்த் தேசியத்தை ஒவ்வொரு கட்சிகளும் எப்படிப் பார்க்கின்றீர்கள்? ஒவ்வொரு கட்சிக்குள்ளும் உள்ளவர்கள் ஒன்றுக்கொன்று முரணான வெவ்வேறு கருத்துகளை வெளிப்படுத்தும்போதும் தேசியத்துக்கு விரோதமான கருத்துக்களைத் தெரியப்படுத்தும்போதும் கட்சியின் நிலைப்பாடு என்ன? நீங்கள் மக்களை ஒரு பொருட்டாகக் கருதுகின்றீர்களா? அப்படி நீங்கள் கருதினால் அரசியல் அரசியல் அறிவு, தமிழ்த் தேசியம் சார்ந்தவர்களிடம் இருந்து வருகின்ற கருத்துகளையும் உள்வாங்கி உங்களது பார்வையைச் செப்பனிடுகின்றீர்களா?

உங்களுக்குள் இருக்கும் களைகளை ஏன் முளையிலேயே பிடுங்கத் தவறுகின்றீர்கள்? எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எப்படிக் கையாளப் போகின்றீர்கள்? ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக என்ன முடிவுகளை நோக்கி மக்களை நகர்த்தப் போகின்றீர்கள்? அந்த முடிவு சர்வதேசத்திடம் எமக்கான தீர்வுக்கான செய்தியாக அமையுமா?

நீங்கள் எடுக்கப் போகும் முடிவு தமிழ்த் தேசியத்தைச் சிதைக்காது எம்மைச் சர்வதேசம் நோக்கி வெளிப்படுத்த உதவுமா? இன்று இடம்பெறுகின்ற மண் பிடிப்பு, மதம்சார் நிலம் பிடிப்பு ஆகிய பல்வேறு ஆக்கிரமிப்புக்கள் நிகழும் போது மௌனமாக இருப்பது ஏன்? இந்த அநீதிக்கு எதிராக தீவிரமாக முன்நின்று செயல்படுபவர்களும் தங்களுடைய நிலையை மாற்றிக்கொள்வது எதற்காக? சர்வதேச நாடுகள் உங்களைக் கையாளுகின்றனவா? இந்தக் கையாடல் தமிழ்த் தேசியத்தையும் தமிழர்களின் எதிர்காலத்தையும் சிதைக்கும் நிலையில் நீங்கள் எவ்வாறு அதனைக் கையாளப்போகின்றீர்கள்?

கட்சித் தலைமை பிழையான வழி நடத்தலைச் செய்கின்றது என்றபோதும் உங்களது மௌனம் அதை ஏற்றுக்கொள்வதாக நாம் எடுத்துக்கொள்ளலாமா? இந்த நிலை எமக்கு நீங்கள் செய்யும் மாபெரும் துரோகம் என எடுத்துக் கொள்வது மிகச் சரியானதே.

தமிழினத்துக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் துரோகம் செய்துகொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் இருக்க வேண்டாம். அது எமது தமிழின இருப் பைச் சிதைக்கும். நீங்கள் எடுக்கின்ற முடிவுகளை அறிவுசார் பெரியோர்கள், சட்ட வல்லுநர்களிடம் ஆலோசனை கேட்கத் தவறாதீர்கள். தமிழ்த் தலைமைகளின் சரியான ஏற்பாடும் ஒற்றுமையும்தான் எமக்கான அரசியல் தீர்வை ஏற்படுத்தும். அதனைத்தான் சர்வதேசமும் கவனிக்கும்.

மக்கள் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தமிழ்த் தேசிய பாதையில், இன விடுத லைப் பாதையில் செல்லட்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்." - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வருகை!



யாழ்ப்பாணம், பெப். 26

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜாவை அவரின் பணிமனையில் வைத்து சந்தித்து, சமகால விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடிய இந்தக் குழுவினர் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களுடன் அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதார கொள்கைகள் மற்றும் நெருக்கடிகள் தொடர்பிலும் விளக்கமளித்ததோடு. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களின் கேள்விகளுக்கும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க பதிலளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மத்திய வங்கி ஆளுநரோடு, மத்திய வங்கியின் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் வட பிராந்திய முகாமையாளர் உட்பட 8 பேர் கலந்து கொண்டனர். (ஐ)

## போதை மாத்திரைகளுடன் கொழும்பில் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 26

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2,180 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இவர் கைது செய்யப்பட்டதாகக் கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 38 வயதான கொட்டாஞ்சேனை பிரதேசத்தை சேர்ந்தவராவார். (ஐ)

## கட்டடங்களின் எண்ணிக்கை 84 இலட்சத்தை தாண்டும்?

கொழும்பு, பெப். 29

நாட்டில் கட்டடங்களின் எண்ணிக்கை 84 இலட்சத்தைத் தாண்டும் என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் என்று பணிப்பாளர் அனோஜா சேனவிரத்ன தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகளுடன் ஒப்பிடுகையில் நாடு முழுவதிலும் உள்ள வீட்டு அலகுகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் சுமார் 60 இலட்சம் கட்டட அலகுகள் பதிவாகியிருந்தன. இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 84 இலட்சத்தைத் தாண்டும் என்று எதிர்பார்ப்பதாக பணிப்பாளர் அனோஜா சேனவிரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

## உன்னிச்சை, நெடியமடுவுக்குள் காட்டுயானைகள் நுழைந்தன!

மட்டக்களப்பு, பெப். 26

உன்னிச்சை, நெடியமடு, கற்பானைக்குளம் கிராமங்களில் யானைகள் புகுந்து பயிர்கள் மற்றும் வீடுகளை சேதப்படுத்தியுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யானை புகுவதைத் தடுக்க மின்சார வேலிகள் இருந்தும் அந்த வேலிகளைத் தாண்டி மாலை கிராமங்களுக்குள் ஊடுருவியுள்ளன என்று கூறப்படுகிறது.

இந்த காட்டு யானை அச்சுறுத்தல்களில் இருந்து எங்கள் பகுதி மக்களை பாதுகாப்பதற்கு இன்று வரை அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. குழந்தைகளுடன் பாதுகாப்பற்ற சூழலில் தாம் வாழ்கிறோம் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

# நிர்வாக சபையின் அனுமதியுடனே சம்பளம் அதிகரிக்கப்பட்டதாம்!

### மத்திய வங்கி இப்படி விளக்கம்

கொழும்பு, பெப். 26

**இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடனும், தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே தமது ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

சம்பள அதிகரிப்பு தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க மத்திய வங்கி தயாராகவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வுகளில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருப்பதாகக்கூறி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மத்திய வங்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதேவேளை இதுகுறித்து விளக்கமளிப்பதற்காக எழுத்து மூல அவகாசம் கோருமாறு நிர்வாக சபையால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக, நிதியமைச்சராக கடமையாற்றும் ஜனாதிபதிக்கு கடந்த 22 ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அவகாசத்தின் பின்னர் உரிய பாராளுமன்றக் குழுவின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க மத்திய வங்கி தயாராகவுள்ளது என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சம்பள அதிகரிப்பு விவகாரம்:

# மத்திய வங்கியினரை விசாரணைக்கு அழைக்க கோபா குழுவுக்கு பரிந்துரை!

கொழும்பு, பெப். 26

சம்பள அதிகரிப்பு தொடர்பான அண்மைய சர்ச்சைகள் குறித்து இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளை பொது நிதி பற்றிய பாராளுமன்ற குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தமது எக்ஸ் தளத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கி தமது ஊழியர்களின் வேதனத்தை 70 சதவீதம் அதிகரித்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகின. இந்த நடவடிக்கை ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது.

இந்நிலையில், மத்திய வங்கியின் ஊழியர்களின் அண்மைய வேதனத் திருத்தத்தின் பின்னணியில் உள்ள செயல்முறை மற்றும் நியாயம் குறித்து, பொருத்தமான பாராளுமன்றக் குழுவின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பதற்கு வாய்ப்பை வழங்குமாறு மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியிடம் எழுத்து மூலக் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். (ஐ)

# எட்கா ஒப்பந்தம் கைச்சாத்தானால் நாட்டில் இலங்கையர் சிறுபான்மையாவர்!

கொழும்பு, பெப். 26

மார்ச் மாதம் 'எட்கா ஒப்பந்தம்' கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இலங்கையர்கள் இலங்கையில் சிறுபான்மையினராக மாறுவர் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

9ஆம் திகதிக்கு பின்னர் இலங்கையின் தலைவிதி என்ற தொனிப்பொருளில் கடுவெல கொஸ்வத்தையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### விமல் வீரவன்ஸ



மார்ச் மாதத்துக்குப் பிறகு, எந்தவோர் இந்தியனும் சுதந்திரமாக வேலைக்காகவும் வர்த்தகத்துக்காகவும் இலங்கைக்கு வர முடியும். சில காலத்துக்குப் பிறகு, இலங்கை இந்தியர்களால் நிரம்புவது தவிர்க்க முடியாதது. அன்றிலிருந்து இலங்கையில் இலங்கையர்கள் சிறுபான்மையினாவர்.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்கு சென்றுள்ள இத்தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இறையாண்மையை பலிகொடுத்து வருகிறார். இந்த பாவ நடவடிக்கைக்கு தினேஷ் குணவர்தனவும், ராஜபக்ஷவும் துணை புரிகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# இலத்திரனியல் சிகரெட்களால் கண், மூளையில் கடும் பாதிப்பு

கொழும்பு, பெப். 26

ஈ - சிகரெட்கள் என்ற இலத்திரனியல் புகையிலை பயன்பாடு காரணமாக கண்கள் மற்றும் மூளையில் கடுமையான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது. இதன்படி, பல்வேறு வகையான பழங்களின் வாசனை வெளிப்படும் வகையில் தயாரிக்கப்படும் ஈ - சிகரெட்கள் தொடர்பில் பெற்றோர் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த சபை கோரியுள்ளது.

இதேவேளை, 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஈ - சிகரெட்களுடன் சந்தேகநபர் ஒருவர், மதுவரி திணைக்கள அதிகாரிகளால் பேலியகொட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபரிடம் இருந்து ஸ்மார்ட் வோட்ச் என்ற நவீனரக கைக்கடிகாரம் போன்று தயாரிக்கப்பட்ட ஈ - சிகரெட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த சில காலமாக இணையத்தளம் ஊடாக குறித்த நபர் இந்தக் கடத்தலை மேற்கொண்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஈ - சிகரெட்கள் அதிகம் விரும்பப்படுகின்றமை தெரியவந்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இங்கிலாந்துடனான டெஸ்ட்

# வெற்றியடைய இந்தியாவுக்கு இன்னும் 192 ஓட்டங்கள் தேவை!



ராஞ்சி, பெப். 26

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்ற இந்திய அணிக்கு 192 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விக்கெட் காப்பாளர் துருவ் ஜூரெல் 2 பௌண்ட்ரி ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களுடனும் குல்தீப் யாதவ் 17 ஓட்டங்களுடனும் 3ஆம் நாள் ஆட்டத்தை நேற்று தொடங்கினர். இருவரும் விக்கெட் விழாத வண்ணம் நிதானமாக விளையாடினர். இங்கிலாந்தின் பந்துவீச்சு தாக்குதலை திறம்பட கையாண்டனர். துருவ் ஜூரெல் அரைச்சதம் கடந்தார். குல்தீப் யாதவ் 131 பந்துகளை சந்தித்து 2 பௌண்ட்ரிகளுடன் 28 ஓட்டங்கள் எடுத்து ஜூரெலுக்கு பக்கபலமாக இருந்தார்.

ஆனால், அண்டர்சனின் பந்துவீச்சில் எதிர்பாரதவிதமாக ஆட்டமிழந்தார். இந்தக் கூட்டணி 80 ஓட்டங்கள் வரை சேர்த்து இந்திய அணியை பரிதாபகரமான நிலையில் இருந்து மீட்டது. இதேபோல் ஆகாஷ் தீப் தன் பங்குக்கு 29 பந்துகளை சந்தித்து 9 ஓட்டங்கள் எடுத்து பொறுமை காத்து ஆட்டமிழந்தார். மறுபக்கம், துருவ் ஜூரெல் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தார். ஆனால், 149 பந்துகளுக்கு 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் என விளையாடி 90 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ரொம் ஹார்ட்லியின் அசாத்திய பந்துவீச்சில் விக்கெட்டை இழந்தார்.

துருவ் ஜூரெலின் சிறப்பான ஆட்டத்தால் முதல் இன்னிங்ஸில் 307 ரன்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இந்திய அணி. இதன்மூலம் இங்கிலாந்தை விட 46 ஓட்டங்கள் பின்னிலையில் வகித்தது இந்தியா. இங்கிலாந்து தரப்பில் சொஹைப் பஷீர் 5 விக்கெட், ரொம் ஹார்ட்லி 3 விக்கெட், அண்டர்சன் 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதன்பின் களமிறங்கிய இங்கிலாந்து அணி வீரர்கள் இந்தியாவின் சுழல்பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சுருண்டனர். தொடர்ச்சியாக விக்கெட்களை இழந்து 145 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் அந்த அணியில் அதிகபட்சமாக ஜாக் கிராவ்லி 60 ஓட்டங்கள் அடித்தார். பெயர்ஸ்ரோவ் 30 ஓட்டங்கள் எடுத்தார். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி சார்பில் அஸ்வின் 5 விக்கெட், குல்தீப் யாதவ் 4 விக்கெட், ஜடேஜா ஒரு விக்கெட் கைப்பற்றினர். இதனால் இந்திய அணிக்கு 192 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இந்திய அணி ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பில்லாமல் 40 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ரோஹித் 24 ஓட்டங்கள், ஜெய்ஸ்வால் 16 ஓட்டங்கள் எடுத்துள்ளனர். இன்னும் 152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறுவதோடு டெஸ்ட் தொடரையும் இந்திய அணி கைப்பற்றும் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## அஸ்வின் இரு சாதனைகள்!

ராஞ்சி, பெப். 26

இந்திய மண்ணில் அதிக டெஸ்ட் விக்கெட்கள் எடுத்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார் ரவிசந்திரன் அஸ்வின் படைத்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் இந்திய மண்ணில் 354 டெஸ்ட் விக்கெட்களை கைப்பற்றினார். இதன் மூலமே இந்த சாதனையை அவர் படைத்தார்.

அத்துடன், அதிக முறை 5 விக்கெட்கள் வீழ்த்திய இந்திய வீரர் என்ற சாதனையையும் சமன் செய்துள்ளார் அஸ்வின். 25ஆவது தடவையாக அவர் இந்த சாதனையை படைத்துள்ளார். முன்னதாக இந்தியாவின் கும்ப்ளே 25 தடவைகள் 5 விக்கெட்களை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆஸி. குடியுரிமை பெற்றார் டில்ஷான்



சிட்னி, பெப். 26

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் திலகரத்ன டில்ஷான் அவுஸ்திரேலிய குடியுரிமையைப் பெற்றுள்ளார்.

டில்ஷான் அவுஸ்திரேலிய குடியுரிமை பெறுவது குறித்து அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் ஜேசன் வூட் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்.

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் இலங்கை தேசிய கிரிக்கட் அணியின் தலைவருமான திலகரத்ன டில்ஷான் கலந்துகொண்டதன் மூலம் இன்றைய குடியுரிமை வழங்கும் விழா மேலும் சிறப்பாக நடைபெற்றது.

ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் ஓட்டங்களை குவிப்பதில் சிறந்த இலங்கை வீரராக டில்ஷான் கருதப்படுகிறார். 2011 ஐ. சி. சி. கிரிக்கெட் உலகக் கோப்பையில் 500 ஓட்டங்கள் குவித்து, அரையிறுதியில் இங்கிலாந்துக்கு எதிராக சதம் அடித்து அதிக ஓட்டங்கள் எடுத்தவர் என்ற சாதனையையும் படைத்திருந்தார்.

அத்துடன், அவர் 2014 இருபது - 20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றியஅணியிலும் அவர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## நியூசிக்கு எதிரான இருபது -20 தொடர் முழுதாக ஆஸி. வசம்!

ஒக்லாந்து, பெப். 26

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 இருபது - 20 மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவதாக ரி - 20 தொடர் நடைபெற்று வந்தது. இதில் முதலிரண்டு ரி - 20 போட்டிகளையும் அவுஸ்திரேலியா கைப்பற்றியிருந்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ரி -20 போட்டி நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 10.4 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்கள் எடுத்திருந்தநிலையில் மழை காரணமாக ஆட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

அவுஸ்திரேலியா அணியின் சார்பில் அதிகபட்சமாக ஹெட் 33 ஓட்டங்களும் எடுத்தனர், மேத்யூ ஷார்ட் 27 ஓட்டங்களும் எடுத்தனர். பின்னர் ஆட்டம் டக்வேர்த் - லூயிஸ் முறைக்கு மாற்றப்பட்டது. இதன்படி நியூசிலாந்து அணிக்கு 10 ஓவர்களில் 126 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பதிலளித்த நியூசிலாந்து அணி 10 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 98 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக பிலிப்ஸ் 40 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் நியூசிலாந்து அணிக்கு எதிரான கடைசி ரி -20 போட்டியில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் (டி. எல்.எஸ். முறை) அவுஸ்திரேலியா அணி வெற்றிபெற்று 3-0 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது. (ஐ)

## வனிந்து ஹசரங்கவுக்கு இரு போட்டிகள் தடை!

டுபாய், பெப். 26

இலங்கை இருபது -20 கிரிக்கெட் அணியின் தலைவர் வனிந்து ஹசரங்கவுக்கு இரண்டு சர்வதேச போட்டிகளில் விளையாட தடையும் கடைசி போட்டியின் ஊதியத்தில் 50 வீதம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் 22 ஆம் திகதி நடந்த ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இருபதுக்கு - 20 போட்டியின் பின்னர் ஒழுக்கமற்ற முறையில் நடந்து கொண்டமைக்காக ஐ. சி. சியின் ஒழுக்காற்றுப் பிரிவு இந்தத் தண்டனையை விதித்துள்ளது.

மேலும், இந்த ஒழுக்காற்று நடவடிக்கைக்கு மேலதிகமாக வனிந்து ஹசரங்கவுக்கு ஒரு குற்றப் புள்ளியை வழங்கவும் சர்வதேச கிரிக்கட் பேரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் மார்ச் 04 - 06 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு இருபது - 20 போட்டிகளில் வனிந்து ஹசரங்க விளையாட மாட்டார்.

ஆப்கானிஸ்தான் அணியுடனான 3 ஆவது இருபதுக்கு - 20 போட்டியின் போது, இலங்கை நடுவரான லிண்டன் ஹன்னிபல், போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும் இறுதி ஓவரில் இடுப்புக்கு மேலாக மிக உயரமாக சென்ற பந்தை முறையற்ற பந்து என்று அடையாளப்படுத்தாதமை தொடர்பில், ஊடகவியலாளர் சந்திப்பின்போது நடுவரை முறையற்ற விதத்தில் பேசி, நடுவரின் முடிவுகளை விமர்சித்ததற்காகவுமே வனிந்து ஹசரங்க மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)




## டுபாய் ரென்னிஸ்; பௌலினி சம்பியன்



டுபாய், பெப். 26

டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் பட்டத்தை இத்தாலியின் பௌலினி கைப்பற்றினார்.

டுபாயில் நடக்கும் இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ரஷ்ய வீராங்கனை அன்னா கலின்ஸ்கயா, இத்தாலி வீராங்கனை ஜாஸ்மின் பௌலினியுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஜாஸ்மின் பௌலினி 4-6, 7-5, 7-5 என்ற செற் கணக்கில் அன்னாவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் தரவரிசையில் 26ஆவது இடத்தில் இருக்கும் பௌலினி, அடுத்த வாரம் முதல் முறையாக முதல் 20 இடங்களுக்குள் நுழைவார். (ஐ)

ஈழநாடு



# வரலாறு புடினை விடுதலை செய்யுமா?

**சு.அருண் பிரசாத்**



இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் நிகழ் வரலாற்றைப் பின்தொடர்வதற்கான திசைவழிகளில் ஒன்றாகஇ ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் 2005இல் ஆற்றிய உரை ஒன்றில் இடம்பெற்ற இந்தக் கூற்று பரவலாகச் சுட்டப்படுகிறது: 'சோவியத் ஒன்றியத்தின் உடைவு இருபதாம் நூற்றாண்டின் பெரும் புவிஅரசியல் பேரழிவு.'

1921-22ஆம் ஆண்டுகளில்இ ஒரு புதிய அரசுக் கட்டுமானமாகச் சோவியத் ஒன்றியம் நிர்மாணிக்கப்பட்டது. பெருங் கனவுடன் உருப்பெற்ற அந்தக் கட்டமைப்பு, 20ஆம் நூற்றாண்டின் திசைவழியைத் தீர்மானித்த சக்திகளுள் முதன்மையானது. என்றபோதிலும், அந்த நூற்றாண்டின் இறுதியைக்கூட எட்ட முடியாத அளவுக்கு உள்ளும் புறமுமாகப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டதால்இ 1991இல் சோவியத் கட்டுமானம் உடைந்து சிதறியது.

சோவியத் ஒன்றியம் உடைந்து 30 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும், உலக அரசியலின் போக்கைத் தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாகவே அதன் விளைவுகள் இருந்துவருகின்றன. சோவியத்தின் ஆவி புகுந்துவிட்ட மேற்குலகின் ஆன்மா, சோவியத் பேரரசை மீண்டும் கட்டியெழுப்ப புடின் விரும்புவதாக நம்புகிறது.

சோவியத்துக்குப் பிந்தைய ரஷ்யாவை நோக்கிய மேற்குலகின்இ குறிப்பாக அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை ஆழம்கொண்டிருப்பது இந்தப் புள்ளியில்தான். ஆனால்இ இந்தப் புள்ளியைச் சுவடு தெரியாமல் அழிக்கிறது புடினின் மற்றொரு கூற்று: 'சோவியத் ஒன்றியம் குறித்த நினைவேக்கம் இல்லாதவர்களுக்கு இதயம் கிடையாது சோவியத் ஒன்றியத்தைத் திரும்பப் பெற விரும்புகிறவர்களுக்கு மூளையே கிடையாது.'

சோவியத்துக்குப் பிந்தைய உலகத்தை ஒற்றைத் துருவ மேலாதிக்கத்துக்குள் கொண்டுவருவதற்கு அமெரிக்காவை மையப்படுத்திய மேற்குலகம்இ புடினின் சொற்கள் வழி அதற்குரிய நியாயத்தைக் கட்டமைக்க முயல்கிறது. கடந்த நான்கு மாதங்களில் இஸ்ரேல் கொன்றுகுவித்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 30,000-ஐத் தொட்டிருக்கும் நிலையிலும்இ ஐ.நா.வில் போர் நிறுத்தத் தீர்மானத்தை 'வீட்டோ' அதிகாரம் மூலம் முறியடித்தது, அமெரிக்கா முன்வைக்கும் 'நியாய'த்தின் சமீபத்திய உதாரணங்களில் ஒன்று அமெரிக்கா 'வீட்டோ' செய்த மூன்றாவது போர் நிறுத்தத் தீர்மானம் இது.

இந்தப் பின்னணியில்தான், புடினின் உரைகளில் வெளிப்படும் அவரது மனம், மேற்குலகம் முன்வைக்கும் நியாயத்துக்கும் கட்டமைக்கும் வரலாற்றுக்கும் மாறான ஒன்றைப் பரிசீலிக்கும் சாத்தியத்தை நமக்கு வழங்குகிறது.

புடினுக்குத் தற்போது 71 வயதாகிறது அவர் தன் வாழ்நாளில் 39 ஆண்டுக்காலம் சோவியத்தில் வாழ்ந்திருக்கிறார் (இது சோவியத்தின் ஒட்டுமொத்தக் காலத்தில் பாதிக்கும் சற்று அதிகம்). சோவியத்துக்குப் பிந்தைய காலகட்டத்தில், 2000ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை ரஷ்யா அவரது ஆளுகையில்தான் உள்ளது (2000-2008 - அதிபர், 2008-2012 - பிரதமர், 2012 முதல் தற்போது வரை அதிபர்).

சோவியத் பேரரசை மீண்டும் கட்டமைக்கும் நோக்கம் தனக்கு இல்லையென்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் திட்டவட்டமாக அவர் வெளிப்படுத்திவந்தாலும், ரஷ்யாவை நோக்கிய மேற்குலகின் அணுகுமுறைக்கு எதிர்வினையாக அமையும் அவரது செயல்பாடுகளை, சோவியத்தின் மகோன்னதத்தில் ஒரு மாற்றுக் குறையாமல் இன்றைய ரஷ்யாவை நிலைநிறுத்தும் நடவடிக்கைகள் என்றே கருத இடமுண்டு.

அந்த வகையில்இ பாதுகாப்புக் கொள்கைக்கான மியூனிக் மாநாட்டில் 2007 மார்ச் 10 அன்று புடின் ஆற்றிய உரை, உக்ரைன் மீதான ரஷ்யாவின் 'சிறப்பு ராணுவ நடவடிக்கை' மூன்றாம் ஆண்டைத் தொட்டிருப்பதன் பின்னணியில் வரலாற்றில் அதன் இடத்தை மேலும் திடப்படுத்திக் கொண்டிருக்கிறது; 21ஆம் நூற்றாண்டின் வரலாற்றுக்கான ஆவணங்களில் ஒன்றாக அதன் கனம் கூடியிருக்கிறது.

அமெரிக்கா என்கிற ஒற்றைத் துருவத்தின் கீழ் சர்வதேச அமைப்பு உள்ளது; அமெரிக்காவின் பலம் எதிர்கொள்ள முடியாதது என 1990களின் இறுதி-2000இன் தொடக்கத்தில் மேற்கில் பரவலாக நிலவிய கருத்தாக்கத்தை அந்த உரையில் புடின் நேரடியாகத் தாக்கிப் பேசினார். நேட்டோவின் செயல்பாடுகள் பற்றிப் பேசும்போதுஇ 'நேட்டோ அதன் முன்னணிப் படையை எங்கள் எல்லைகளில் நிறுத்தியுள்ளது, இருந்தபோதிலும் நாங்கள் இதுவரை அதற்கு எதிர்வினை ஆற்றவில்லை.

நேட்டோ விரிவடைந்துவருவது ஆத்திரமூட்டும் வகையில் பரஸ்பர நம்பிக்கையைக் குலைக்கிறது. இது யாருக்கு எதிரான விரிவாக்கம் என்று கேட்கும் உரிமை எங்களுக்கு உள்ளது. வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டபோது, மேற்குலகக் கூட்டாளிகள் அளித்த உத்தரவாதங்கள் என்னவாகின?' எனச் சரமாரியான கேள்விகளால் புடின் மேற்குலகைத் துளைத்தார்.

சர்வதேச அரசியலில் மிகுந்த விவாதத்துக்கு உள்ளான இந்த உரை, அமெரிக்கா-அதன் கூட்டாளிகளுக்கு எதிரான ராஜாங்கரீதியிலான எச்சரிக்கை என்றும் விரிவடைந்து வரும் நேட்டோவுக்கு எதிராக ரஷ்யா பொறுமையிழந்து வருவதை உணர்த்துவதாகவும் அரசியல் நோக்கர்கள் அவதானித்தனர் புதிய பனிப் போரின் தொடக்கம் என்றுகூடக் கருதினர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, உலகின் பெரும்பான்மை நாடுகள் அமெரிக்கா தலைமையிலும் சோவியத் ஒன்றியத்தின் தலைமையிலும் இரண்டு முகாம்களாகப் பிரிந்தன. பாதுகாப்பை முன்னிறுத்தி அமெரிக்கா தலைமையில் நேட்டோவும் சோவியத் ஒன்றியத்தின் தலைமையில் வார்சா ஒப்பந்தமும் உருவாக்கப்பட்டன் 1986இல் வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது.

நேட்டோ உருவாக்கப்பட்டதன் நோக்கம் சோவியத் உடைவுக்குப் பிறகு காலாவதி ஆகிவிட்டபடியால், அதுவும் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், ரஷ்யாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மேற்குலகம் நேட்டோவைக் கலைக்கவில்லை. மாறாகஇ சோவியத் முகாமில் இருந்த நாடுகளை நேட்டோவுக்குள் கொண்டுவந்தது. 1990களில் தொடங்கிய இந்தப் போக்குஇ 2007-2008 காலகட்டத்தில் ரஷ்யாவின் எல்லைக்கு - உக்ரைன், ஜார்ஜியா - வந்து நின்றது. மியூனிக்கில் புடின் கொந்தளிக்க இதுதான் காரணம்.

1990கள் தொடங்கி அமெரிக்க அரசாங்கத்தில்இ அதன் வெளியுறவுத் துறையில் இடம்பெற்றிருந்தவர்களில் சிலர் நேட்டோவைக் கொண்டு ரஷ்யாவை நெருக்குவது குறித்துத் தொடர்ச்சியாக எச்சரித்து வந்துள்ளனர். 2008இல் ருமேனியத் தலைநகர் புஷாரெஸ்ட்டில் நடைபெற்ற நேட்டோ ஆண்டுக் கூட்டத்தில், அப்போதைய ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கெல்இ அப்போதைய பிரான்ஸ் அதிபர் நிகொலஸ் ஸர்கோஸி ஆகியோர் 'உக்ரைனும் ஜார்ஜியாவும் நேட்டோவில் இணைவதை ரஷ்யா ஏற்காது; அதைத் தன்னுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே பார்க்கும்' என்று எச்சரித்தனர்.

அதே காலகட்டத்தில், ரஷ்யாவுக்கான அமெரிக்கத் தூதராக இருந்தவரும் அமெரிக்க உளவுத் துறையான சிஐஏ-வின் தற்போதைய இயக்குநருமான வில்லியம் பேர்ன்ஸ்இ அமெரிக்க அரசுக்கு அனுப்பிய ரகசிய அறிக்கையில், உக்ரைனும் ஜார்ஜியாவும் நேட்டோவில் இணைவதை ரஷ்யாவின் அரசியல்வாதிகள் கட்சிப் பாகுபாடின்றி எதிர்க்கின்றனர், இக்கொள்கை நிலை தொடரும்பட்சத்தில, ரஷ்யா ராணுவ நடவடிக்கையில் இறங்கும் என்றும் எச்சரித்திருந்தார்.

எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாமல் ஜார்ஜியாவை நேட்டோவில் இணைப்பதற்காக 2009இல் அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. எனினும் ஜார்ஜியாவில் விட்டதை உக்ரைனில் பிடிப்பதற்காக அப்போது தொடங்கிய நடவடிக்கைகள், பல்வேறு நிலைகளைக் கடந்து 2022 பிப்ரவரி 24 அன்று உக்ரைன் மீது ரஷ்யாவைப் போர் தொடுக்கவைப்பதில் வந்து நின்றன.

இந்த இரண்டு ஆண்டுகளில், உறவு நாடுகளுக்கு அமெரிக்கா வழங்கிய ராணுவ உதவியில் 44 வீதம் உக்ரைனுக்குச் சென்றுள்ளது. 2023 செப்டம்பர் வரை ரூ.8,000 கோடி அளவுக்கு ஆயுத ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் ஷரூ.5இ000 கோடிக்கு மேல் ஐரோப்பியக் கூட்டாளிகளுக்குச் சென்றிருப்பதாகவும் (வழக்கத்தைவிட ஐந்து மடங்கு அதிகம்) அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்திருக்கிறது. ஆக, இந்தப் போர் உண்மையில் யாருக்கு இடையிலானது?

2015இல்இ ஐ.நா.வின் 70ஆம் ஆண்டுக் கூட்டத்தில் உரையாற்றிய புடின், மேற்குலகை நோக்கி எழுப்பிய கேள்வி இன்று இன்னும் கூர்மையடைந்திருக்கிறது. 'இந்த நிலையை உருவாக்கியவர்களிடம் நான் கேட்க விரும்புகிறேன்: நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதைக் குறைந்தபட்சம் இப்போதேனும் உணர்ந்திருக்கிறீர்களா?'

வரலாறு இன்று வந்தடைந்திருக்கும் புள்ளி இதுதான்.

# மனிதப் புதைகுழி போர் நடைபெற்ற காலத்தை சேர்ந்தது! - அறிக்கை கூறும் புதிய தகவல்

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் ஒரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. இது பல சர்ச்சைகளைக் கிளப்பி வந்தது. இந்நிலையில், அங்கு கிடைத்த பொருட்களை ஆராய்ந்து தொல்பொருள் அதிகாரிகள் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர். இதில் அப்புதைகுழி 1990களில் போர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற அறிக்கை வெளிவருவது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளாக, இருபதுக்கும் அதிகமான மனித புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி சமீபத்தில் அடையாளம் காணப்பட்டது.



இலங்கையில் 56 மனித புதைகுழிகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில், இதுவரை 21 மனித புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழி தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்த பின்னணியில், முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இந்த மனிதப் புதைகுழியின் காலப்பகுதி தொடர்பான அறிக்கையொன்றை தொல்பொருள் அதிகாரிகள் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கை இப்புதைகுழியின் காலப்பகுதி இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலப்பகுதியுடன் ஒத்துப் போகின்றதாகச் சொல்கிறது.

**குடிநீர் குழாய் பதிக்கும்போது வெளிவந்த புதைகுழி**

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி கடந்த ஆண்டு ஜூன் மாதம் 29-ஆம் தேதி அடையாளம் காணப்பட்டது.

கொக்குத்தொடுவாய் பகுதியில் குழாய் நீர் பொருத்தும் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது இந்த மனித புதைகுழி அடையாளம் காணப்பட்டது.

கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு பிரதான வீதியோரத்தில் இந்த மனித புதைகுழி அடையாளம் காணப்பட்டது.


குழாய் நீர் பொருத்தும் நடவடிக்கைகளுக்காக வீதியோரத்தில் அகழ்ந்த சந்தர்ப்பத்தில் மனித எச்சங்கள் மற்றும் பெண்களின் உள்ளாடைகள் சில அடையாளம் காணப்பட்டன.

இதையடுத்து, இந்த சம்பவம் தொடர்பாக பொலீசாருக்கு அறிவிக்கப்பட்டதை நிலையில், குறித்த அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அதையடுத்து, நீதவான் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, ஜூலை மாதம் 6-ஆம் தேதி நீதவான் முன்னிலையில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

**40 மனித எலும்புக்கூடுகள் மீட்பு**

குறித்த பகுதியில் மனித புதைகுழி காணப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த அகழ்வு




பணிகள் முன்னெடுக்கப்பட்டு, புதைகுழி இருப்பதை நீதவான் உறுதிப்படுத்தினார்.

அதையடுத்து, இந்த சம்பவம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு, அகழ்வு பணிகளை முன்னெடுக்க நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில், முதல் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ஆம் தேதி நடாத்தப்பட்டது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் ஊடாக 40 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**புதைகுழியின் காலகட்டம் என்ன?**

கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழி தொடர்பான இடைகால அறிக்கையை, தொல்லியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ முல்லைத்தீவு நீதிமன்றத்தில் கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தார்.

இந்த இடைகால அறிக்கையின் பிரகாரம், குறித்த மனித புதைக்குழி 1994-ஆம் ஆண்டுக்கு முற்படாததும், 1996-ஆம் ஆண்டுக்கு பிற்படாததுமான காலப்பகுதியை கொண்டிருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதாக வழக்குரைஞர் கே.வி.நிறஞ்சன் தெரிவிக்கின்றார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழி வழக்கு மீதான விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் வியாழன், பிப்ரவரி 22ல் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

‘ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களிலிருந்தும், பிறிதான எடுக்கப்பட்ட பிற பொருட்கள் தொடர்பான அறிக்கை பேராசிரியர் ராஜ் சோமதேவ அவர்களினால் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில், நீதவான் பிரதிபனினால் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அதற்கமைவாக எடுக்கப்பட்ட பொருட்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட போது, இது 1994-ஆம் ஆண்டுக்கு முற்படாததும், 1996-ஆம் ஆண்டுக்கு பிற்படாததுமான காலப்பகுதியை கொண்டிருக்கலாம் என்று பல பக்க அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன,” என்கிறார் அவர்.

**புதைகுழியில் கிடைத்த பொருட்கள் என்ன?**

மேலும் பேசிய அவர், “அதனடிப்படையில், இது இடைக்கால அறிக்கையாக பார்க்கப்படுகின்றது. அத்துடன், எஞ்சிய மனித எச்சங்களை அகழ்ந்து எடுப்பதற்கான அநேகமாக மார்ச் மாதம் 4-ஆம் தேதி தொடங்க இருக்கின்றது. அதற்கான பண உதவிகள் அமைச்சகத்தினால் வழங்கப்படும் பட்சத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது,” என வழக்குரைஞர் கே.வி.நிறஞ்சன் தெரிவிக்கின்றார்.

இந்த மனித புதைக்குழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களின் வயது, அதன் பால் மற்றும் இறப்புக்கான காரணம் போன்ற அறிக்கைகள் இன்னும் வெளிவராது நிலுவையில் உள்ளதாக வழக்கறிஞர் கே.வி.



நிறஞ்சன் மேலும் குறிப்பிடுகின்றார்.

“மனித எலும்புகள் தொடர்பாக இந்த அறிக்கை வெளி வரவில்லை. புதைக்குழியிலிருந்து எடுக்கப்பட்ட வேறு பொருட்கள் தொடர்பாகவே அறிக்கை வெளிவந்துள்ளது. இனிப்பு பண்டங்களின் கடதாசிகள், துப்பாக்கி தோட்டாக்கள், ஆடைகள் உள்ளிட்ட பொருட்களின் அடிப்படையிலேயே இந்த காலப்பகுதிக்குள் இருக்கலாம் என்று பேராசிரியர் ராஜ் சோமதேவ இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

“முழுமையான அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்ட அறிக்கையில் இது மாத்திரமே சொல்லப்பட்டுள்ளது. அறிக்கையை பெற்றுக் கொள்ள நாம் அனுமதித்துள்ளோம். ஓரிரு தினங்களில் முழுமையான அறிக்கை கிடைக்கவாய்ப்புள்ளது,” என வழக்குரைஞர் கே.வி.நிறஞ்சன் கூறினார்.

**‘யுத்தகாலத்து புதைகுழியாக இருக்கலாம்’**

முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவ, “இந்த மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டன. அப்போது அகழ்வாய்வு பணிகளில் ஈடுபட்ட தொல்பொருளியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ அவர்களின் இடைகால அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது,” என்றார்.

“இடைக்கால அறிக்கையின் படி தொல்பொருளியல் குழுவினரால் 40 சடலங்கள் ஆராயப்பட்டுள்ளன. அவர்களின் முடிவுகளின் பிரகாரம், இந்த சடலங்கள் சமய ஆச்சார முறைப்படி அல்லாமல் மிக விரைவாக இந்த சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன.



“அத்துடன், இந்த சடலங்கள் 94-ஆம் ஆண்டுக்கும், 96-ஆம் ஆண்டு காலப்பகுதிக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தினால் இறந்தபோது புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது,” என கனகசபாபதி வாசுதேவ தெரிவிக்கின்றார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாகவும் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவ குறிப்பிடுகின்றார்.

எனினும், இந்த மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இதுவரை நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை என அவர் கூறுகின்றார்.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர், நீதி அமைச்சகத்தின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இந்த நிதியுதவி கிடைக்கும் பட்சத்தில், கொக்குத்தொடுவாய் அகழ்வு பணிகளை மார்ச் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவ குறிப்பிடுகின்றார்.

(16ம் பக்கம் பார்க்க)

# மனிதப் புதைகுழி போர் நடைபெற்ற...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 4-ஆம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**1800-களைச் சேர்ந்த புதைகுழி என்பது சரியா?**

“காணாமல் போனோர் குடும்பங்கள் ஒன்றிய’த்தின் தலைவர் பிரிட்டோ பெர்ணான்டோ, ‘நாம் அகழ்ந்த அனைத்து மனித புதைகுழிகளிலும், உதாரணமாக மாத்தளை, மன்னார் உள்ளிட்ட மனித புதைக்குழிகள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற அறிக்கையின் பிரகாரம், இந்த மனித புதைகுழிகள் 1800-களில் இடம்பெற்ற கிளர்ச்சிகள் என்றே இறுதி பெறுபேறாக அமைந்தது,” என்றார்.

“ஆனால், அதனை நாம் நம்ப போவதில்லை. எனி




னும், சட்டத்திற்கு முன்பாக அதனை சவாலுக்கு உட்படுத்தும் போது, அது தொடர்பான விஞ்ஞான ரீதியான சாட்சியங்கள் எப்படி வெளிவரும் என கூற முடியாது. எனினும், நீதிமன்றங்கள் விஞ்ஞான ரீதியான அறிக்கைகளையே ஏற்றுக்கொள்கின்றன,” என்றார்.

“குறிப்பாக, மாத்தளை மனித புதைகுழி தொடர்பாக கிடைக்கப் பெற்ற கார்பன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது ஒன்று. இலங்கை நிபுணர்கள் கூறியது வேறொன்று. அதேபோன்றே, கொக்குத்தொடுவாய் தொடர்பாக உள்ளூர் நிபுணர்கள் என்ன கூறினாலும், சர்வதேச ரீதியில் வேறொரு கருத்து வரக்கூடும்,” என்றார்.

மேலும், “ஆட்சியிலுள்ள அரசாங்கங்களுக்கு நியாயமான அரசியல் தேவை இல்லையென்றால், இந்த சம்பவங்கள் தொடர்பான உண்மையை வெளிக்கொணர்வ



தற்கு எந்தவொரு உடலையும் பழைய உடலாக மாற்ற முடியும்,” என்றார்.

மேலும் பேசிய பிரிட்டோ பெர்ணான்டோ, ‘இந்த விடயத்திற்கு இன்றும் நாங்கள் நிர்கதி நிலையில் உள்ளோம். மக்கள் கருத்துக் கணிப்பொன்றை ஏற்படுத்தி, அதனை சரியான முறையில் செய்வதற்கு நாங்கள் இன்றும் நிர்கதியாகியுள்ளோம். இவ்வாறு கூறப்படுகின்ற கருத்தை எம்மால் நம்ப முடியாதுள்ளது. ஏனென்றால், பழைய அனுபவங்களின் ஊடாக கூறுகின்றேன். இந்த கருத்தை நம்ப முடியாது,” என்று தெரிவித்தார்.

போர் நடைபெற்ற பகுதியொன்றிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித புதைகுழி, போர் இடம்பெற்ற காலப் பகுதிக்கு உரித்துடையது என்ற நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் வகையிலான உள்நாட்டு நிபுணர்களினால் வெளியிடப்பட்ட முதலாவது அறிக்கையாக இது அமைந்துள்ளது என அவர் கூறுகின்றார்.

“காணாமல் போன மக்களின் அறிக்கையொன்றை வழங்குமாறு வவுனியா நீதிமன்றம் ராணுவத்திற்கு உத்தரவு பிறப்பிக்கின்றது. ஆனால், ராணுவம் இன்றும் அதனை வழங்கவில்லை. குறித்த அறிக்கைகளை நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்குமாறு காணாமல் போனோர் அலுவலகம் பல கடிதங்களை அனுப்புகின்றது. அதனை கருத்தில் கொள்ளவில்லை.

“அவ்வாறான நாடொன்றிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம். எந்த அறிக்கைகளை வழங்கினாலும், அரசாங்கத்தின் அரசியல் தேவைகளுக்கு இதனை கீழ்படிய வைக்க முடியும். அதனால், இது போர் நடைபெற்ற காலப்பகுதிக்கு சொந்தமானது என ராஜ் சோமதேவ அவர்கள் கூறுகின்றார்கள் என்றால், அந்த காலப் பகுதியில் அந்த பகுதியை ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது என்றால், இனி வேறு என்ன சாட்சி தேவைப்படுகின்றது.

“எனினும், நீதிமன்றத்தில் அதனை உறுதிப்படுத்த முயற்சித்தால், அதனை எம்மால் உறுதிப்படுத்த முடியாது போகும்,” என அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

**பாதுகாப்பு அமைச்சகத்தின் பதில்**



பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியானது, குறித்த மனித புதைக்குழி காணப்பட்ட கொக்குத்தொடுவாய் நிலப்பரப்பு முழுமையாக ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததாக அந்த பிரதேச மக்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக கூறிவருகின்றனர்.

இந்த நிலையில், இது குறித்து பாதுகாப்பு அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பியபோது,

“இந்த சம்பவம் தொடர்பிலான தகவல்களை ஆராய்ந்து, பதிலை பின்னர் கூறுகின்றேன்,” என, பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேணல் நலின் ஹேரத், தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சகத்தின் பதில் கிடைத்ததும் இச்செய்தியில் பதிவு செய்யப்படும்.

